# கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(12.04.2015 - 12 சித்திரை 2015 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 05, கதிர் - 110 16 பக்கங்கள் ரூபா: 25.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD / 37 / NEWS / 2014

# ஞான ஒளி

ඥාන ඔලි

GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05




"இறை இரக்கம் இதயத்தில் பொங்கி வழியும் ஜீவ ஊற்று நம்மில் இருளகற்றி, மகிழ்ச்சி தந்து விசுவாச விளக்கை அணையாமல் காக்கட்டும்"

# மகிழ்ச்சியான புனித உயிர்ப்பு விழா வாழ்த்துக்கள்



## பிரியமான சகோதர சகோதரிகளே,

திருச்சபையானது உலகெங்கும் முழக்கமிடும் அல்லது பறைசாற்றும் செய்தி என்னவெனில் வானதூதர் பெண்களுக்கு செய்தி "அப்பொழுது வானதூதர் அப்பெண்களைப்பார்த்து, "நீங்கள் அஞ்சாதீர்கள் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என எனக்குத் தெரியும். அவர் இங்கே இல்லை. அவர் கூறியபடியே உயிருடன் எழுப்பப்பட்டார். அவரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்" (மத்தேயு 28:5-6)

சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்பதே நற்செய்தியின் சிறப்பு. இதுவே நற்செய்தி நூல்களின் உச்சமான நற்செய்தியின் சிறப்பு. இதுவே நற்செய்தி நூல்களின் உச்சமான செய்தியாகும். எங்கள் விசுவாசத்திற்கும், நம்பிக்கைக்கும் அடித்தளமாய் இருப்பதும் இந்நிகழ்வே. கிறிஸ்து உயிர்த்தெழவில்லை எனில் கிறிஸ்தவ மறை தன் உண்மைப்பொருளை இழந்திருக்கும் திருச்சபையின் பணிகள் அனைத்தும் மூச்சை இழந்திருக்கும். ஏனெனில் இந்நிலையில் இருந்துதான் முதலில் கிறிஸ்தவம் பரவத் தொடங்கியது. எப்பொழுதும் தொடர்ந்து பரவிக் கொண்டுள்ளது. கிறிஸ்தவர்கள் உலகிற்கு கொண்டுவரும் செய்தி என்னவெனில், எங்களுடைய பாவங்களுக்காக சிலுவையில் இயேசு மரித்தார். ஆனால் கடவுளும், தந்தையுமானவர், அவரை உயிர்ப்பித்து வாழ்விற்கும், சாவிற்கும் ஆண்டவராக உயர்த்தினார். கிறிஸ்துவில் வெறுப்பின்மேல் அன்பும், பாவத்தின் மீது இரக்கமும், தீமையின் மீது நன்மையும், பொய்மையின் மீது உண்மையும், சாவின் மீது வாழ்வும் வெற்றிக்கொண்டது.

அதனால்தான் நாங்கள் எல்லோரும் சொல்லுகிறோம் "வந்து பாருங்கள்" சாவு, பாவம், தவநிலைக்கும் தன்மை என்பவற்றின் தாக்கத்துக்குள்ளாகும் ஒவ்வொரு மனிதனுடைய சூழ் நிலையிலும் நற்செய்தி என்பது வெறும் வார்த்தையல்ல மாறாக, அது நிபந்தனையற்ற உறுதியான அன்புக்கு சாட்சியமாகும். இது எங்களைவிடுத்து மற்றவர்களுடன் உரையாடுவதும், வாழ்வின் துன்பங்களால் நொறுக்கப்பட்டவர்களுக்கு அருகில் இருப்பதும் தேவையில் இருப்பவர்களுடன் பகிர்வதும், பிற இனத்தவருடன் வயது முதிர்ந்தவர்களுடன் நோயாளர்களுடன் உடன் நிற்பதும்..." "வந்து பாருங்கள்" அன்பு மிகவும் சக்தி வாய்ந்தது. அன்பு வாழ்வு கொடுக்கும் அன்பு பாலைவனத்தில் பூப்பது போன்று நம்பிக்கை கொடுக்கும்.

உயிர்த்த ஆண்டவரே எங்கள் உள்ளத்து உறுதியான மகிழ்ச்சியுடன் இன்று நாங்கள் உம்மிடம் வருகின்றோம்.

நாங்கள் அநாதைகள் அல்ல, எங்களுக்கு ஒரு தந்தையுண்டு என்பதை உணர்ந்து உம்மைத் தேடி உம்மைக் கண்டு கொள்ள உதவி செய்யும் நாங்கள் உம்மை அன்பு செய்து ஆராதிப்போமாக.

முரண்பாட்டாலும் அதீத வீண் விரயத்தாலும் ஏற்படும் பட்டினியின் கொடுமையை மேற்கொள்ள எங்களுக்கு உதவி செய்யும். ஆபத்தில் உள்ளவர்களை விசேடமாக கைவிடப்பட்ட பிழையாக பயன்படுத்தப்படுகின்ற சிறுவர்கள், பெண்கள் முதியவர்களை பாதுகாக்க எங்களுக்கு திடத்தைத்தாரும்.

குயினியா, ஹாக்றே, சிரியா, லியோனி, லைபிரியா போன்ற இடங்களில் எபொலா தொற்று நோய்க்கு உள்ளாகியிருக்கும் சகோதர சகோதரிகளை பராமரிக்க திடத்தைத் தாரும்.

»«« தொடர்ச்சி 15ம் பக்கம் »««






கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் குருத்துவ திருநிலைப்படுத்தும் திருப்பலி
18.04.2015
கொழும்பு கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தில் காலை 9.30 மணிக்கு கருதினாலின் தலைமையில்...

## திருத்தந்தையின் கை பட்டவுடன் திரவமாக மாறிய புனிதரின் உறைந்த இரத்தம்

திருத்தந்தை பிரான்சிஸ் அண்மையில் இத்தாலியின் நேப்பிள்ஸ் நகரத்துக்குச் சென்றபோது அங்குள்ள பேராலயத்தில் திருப்பண்டமாக வைக்கப்பட்டிருந்த புனித ஜனுவாரிஸ் என்பவருடைய உறைந்த இரத்தம் திரவமாக மாறிய அற்புதம் நடந்தது.

« தொடர்ச்சி 15ம் பக்கம் «



## திருப்பாலத்துவ பாடல்கள் இறுவெட்டு வெளியீடு

திருப்பாலத்துவ சபை சிறுவர்களே, ஊக்குவிப்பாளர்களே!

திருப்பாலத்துவ சபை பாடல் இறுவெட்டில் (CD) உங்கள் கைவண்ணத்தில் உருவான பாடல்களும் இடம்பெற வேண்டுமா? உங்கள் ஊக்குவிப்பாளர்களோடு இணைந்து திருப்பாலத்துவ சபை தொடர்பான கருத்துக்கள் அடங்கிய பாடல்களை எழுதி கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். தரமான பாடல்கள் நடுவர்களால் தெரிவு செய்யப்பட்டு உங்களது பெயர்களின் உள்ளடக்கத்துடன் இறுவெட்டு (CD) வெளியிடப்படவிருக்கிறது. அத்துடன் சிறந்த குரல் வளம் உள்ள திருப்பாலத்துவ சிறுவர்கள் தங்கள் பெயர், முகவரி, தொடர்பிலக்கம் போன்றவைகளை தெளிவாக எழுதி உங்கள் மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை இயக்குனருக்கு அனுப்பி வையுங்கள். எதிர்வரும் வைகாசி 31ம் திகதிக்கு முன், பின்வரும் முகவரிக்கு உங்கள் பாடல்களை அனுப்பி வையுங்கள்.

««« தொடர்ச்சி 15ம் பக்கம் «««

## அதி சிரேஷ்ட சகோதரர்



வணக்கத்துக்குரிய அருட்சகோதரர் ஜோஸ் வலியரா அவர்கள் புனித பிரான்சிஸ் அசிசி மறைபரப்பு சபையின்....

தொடர்ச்சி 15ம் பக்கம்

## புதிய தலைவர்



**கிளரேசியன் சபையின் ஜேர்மன் மாகாணத்திற்கான புதிய தலைவர்**

கிளரேசியன் சபையின் ஜேர்மன் மாகாணத்தின் புதிய தலைவராக இலங்கை கண்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட அருட்தந்தை கவிஸ்ரஸ் ஜோசப் (CMF) தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி 15ம் பக்கம்

"நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள்" (யோவான் 20:28)

# கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் 17 தியாக்கோன்கள் குருக்களாக திருநிலைப்படுத்தப்படுகின்றார்கள்

## சித்திரை மாதம், 18ஆம் திகதி, 2015



**அருட்சகோதரர் T. டொன் அமில விக்கிரம**

**பிறப்பு :** 1984 கார்த்திகை 27ஆம் திகதி

**பெற்றோர் :** காலஞ்சென்ற தித்தாவலகே டொன் என்டனி நெவில் விக்கிரம, திருமதி. நந்துகல வித்தான பத்திரன தீபிகா அவர்களின் மகன்

**கல்வி :** கந்தான டி மெசனட் கல்லூரியிலும், மேற்கல்வியை மொரட்டுவ புனித செபஸ்தியார் கல்லூரியிலும் கற்றார்.

**தியாக்கோனாக திருநிலைப்படுத்தப்பட்டது :** 19.10.2014

**இவர் தனது முதற்திருப்பலியை இம்மாதம் 19ஆம் திகதி காலை 8.30 மணிக்கு ரத்மலானை 4வது ஒழுங்கை, புனித ஜூட் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கிறார்.**



**அருட்சகோதரர் எட்டிகே ரவின் தர்ஷன பெர்னாண்டோ**

**பிறப்பு :** 1986 ஆவணி 24ஆம் திகதி

**பெற்றோர் :** H. பெனடிக்ட் பெர்னாண்டோ திருமதி. T. பியட்ரிஸ் பெர்னாண்டோ அவர்களின் மகன்

**ஆரம்பக் கல்வி :** களுத்துறை திருச்சிலுவை கல்லூரி.

**தியாக்கோனாக திருநிலைப்படுத்தப்பட்டது :** 19.10.2014

**இவர் தனது முதற்திருப்பலியை இம்மாதம் 19ஆம் திகதி காலை 8.30 மணிக்கு மக்கோன, புனித மரியாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கிறார்.**



**அருட்சகோதரர் ரவிந்திர குமார் பீரிஸ் புள்ளே**

**பிறப்பு :** 1986 மாசி 21ஆம் திகதி

**பெற்றோர் :** திரு. லக்ஷ்மன் ஜோசப் பீரிஸ் புள்ளே. திருமதி. மாலினி பெர்னாண்டோ புள்ளே அவர்களின் மகன்

**ஆரம்பக் கல்வி :** கந்தவல புனித சூசையப்பர் கல்லூரியிலும், திருத்தந்தை 6ம் பவுல் வித்தியாலயத்திலும் கற்றார்.

**தியாக்கோனாக திருநிலைப்படுத்தப்பட்டது :** 19.10.2014

**இவர் தனது முதற்திருப்பலியை இம்மாதம் 19ஆம் திகதி காலை 7.30 மணிக்கு கந்தவெல, அன்னை வியாகுலமாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கிறார்.**



**அருட்சகோதரர் தொம்மே சுவக்கீனு செபஸ்தியன் சுதர்ஷன்**

**பிறப்பு :** 1987 மாசி, 22ஆம் திகதி

**பெற்றோர் :** திரு. தொம்மே சுவக்கீனு கவ்ஷானன் மெஸ்கிரிம்குஸ், திருமதி. அனட் சுவர்னா பெர்னாண்டோ அவர்களின் மகன்

**ஆரம்பக் கல்வி :** நீர்கொழும்பு புனித மரியாள் கல்லூரியில் கற்றார்.

**தியாக்கோனாக திருநிலைப்படுத்தப்பட்டது :** 19.10.2014

**இவர் தனது முதற்திருப்பலியை இம்மாதம் 19ஆம் திகதி காலை 7.30 மணிக்கு நீர்கொழும்பு, முன்னக்கரை புனித நிக்கலஸ் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கிறார்.**



**அருட்சகோதரர் எட்டியாராச்சிகே டொன் ஜூட் அசித்த மதுஷங்க**

**பிறப்பு :** 1985 சித்திரை 13ஆம் திகதி

**பெற்றோர் :** திரு. எட்டியாராச்சிகே டொன் பீட்டர் பெனடிக்ட், திருமதி. ஜயமான்னே மோஹோட்டிகே டோனா ஆன் திலாங்கனி சுவர்னலதா அவர்களின் மகன்

**ஆரம்பக் கல்வி :** பமுனுகம கொன்சால்வேஸ் கல்லூரி.

**தியாக்கோனாக திருநிலைப்படுத்தப்பட்டது :** 24.05.2013

**இவர் தனது முதற்திருப்பலியை இம்மாதம் 19ஆம் திகதி காலை 7.30 மணிக்கு பமுனுகம, புனித சூசையப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கிறார்.**



**அருட்சகோதரர் வர்ணகுலசூரிய மனோஜ் குமார் பெர்னாண்டோ**

**பிறப்பு :** 1987 வைகாசி 21ஆம் திகதி

**பெற்றோர் :** திரு. வர்ணகுலசூரிய நிமால் அன்டனி பெர்னாண்டோ, காலஞ்சென்ற திருமதி. வர்ணகுலசூரிய ரோஸ் வேர்ஜினி பெர்னாண்டோ அவர்களின் மகன்

**ஆரம்பக் கல்வி :** நீர்கொழும்பு, புனித செபஸ்தியார் கல்லூரி

**தியாக்கோனாக திருநிலைப்படுத்தப்பட்டது :** 19.10.2014

**இவர் தனது முதற்திருப்பலியை இம்மாதம் 19ஆம் திகதி காலை 8.00 மணிக்கு நீர்கொழும்பு கடற்கரைதெரு, புனித செபஸ்தியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கிறார்.**



**அருட்சகோதரர் கந்தவலகே நிரோஷன் சுமித் பிரியந்த பெரேரா**

**பிறப்பு :** 1975 புரட்டாதி 19ஆம் திகதி

**பெற்றோர் :** திரு. கந்தவலகே ரேமன்ட் லெஸ்லி பெரேரா, திருமதி. வன்னியாராச்சிகே ஜெனட் மாலனி பெரேரா அவர்களின் மகன்

**கல்வி :** கடவல, புனித சூசையப்பர் கல்லூரியிலும், நீர்கொழும்பு, புனித மரியாள் கல்லூரியிலும் கல்வி கற்றார்.

**தியாக்கோனாக திருநிலைப்படுத்தப்பட்டது :** 19.10.2014

**இவர் தனது முதற்திருப்பலியை இம்மாதம் 19ஆம் திகதி காலை 7.30 மணிக்கு கடுவாபிட்டிய, புனித செபஸ்தியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கிறார்.**



**அருட்சகோதரர் நலின் குமார் பெர்னாண்டோ**

**பிறப்பு :** 1978 கார்த்திகை 3ஆம் திகதி

**பெற்றோர் :** திரு. ஜஸ்டின் அனஸ்லி பெர்னாண்டோ, திருமதி. ரணசிங்க ஆராய்ச்சிலாகே சுவர்ணலதா அவர்களின் மகன்

**கல்வி :** நுவரெலியா, வித்தியாசாகர வித்தியாலயத்தில் கல்வி கற்றார்.

**தியாக்கோனாக திருநிலைப்படுத்தப்பட்டது :** 19.10.2014

**இவர் தனது முதற்திருப்பலியை இம்மாதம் 26ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நுவரெலியா பிளக்பூல், புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கிறார்.**



**அருட்சகோதரர் லின்தொட்டகே பிரஷான் டிலந்த பெர்னாண்டோ**

**பிறப்பு :** 1987 புரட்டாதி 14ஆம் திகதி

**பெற்றோர் :** திரு. லின்தொட்டகே ஹெமன்த பெர்னாண்டோ, திருமதி. லின்தொட்டகே கிளேரிஸ் தமயந்தி பெர்னாண்டோ அவர்களின் மகன்

**ஆரம்பக் கல்வி :** கட்டான, மரியரெஜினி வித்தியாலயத்தில் கற்றார்.

**தியாக்கோனாக திருநிலைப்படுத்தப்பட்டது :** 19.10.2014

**இவர் தனது முதற்திருப்பலியை இம்மாதம் 19ஆம் திகதி காலை 7.30 மணிக்கு ஹல்பே, புனித பிரான்சிஸ் சேவியர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கிறார்.**



**அருட்சகோதரர் டொன் மனுவல் அன்ராடி முதியன்சேலாகே ரங்க ஷேஹான் அன்ராடி**

**பிறப்பு :** 1987 ஆனி 21ஆம் திகதி

**பெற்றோர் :** திரு. ஜோசப் ரோஹான் அன்ராடி, திருமதி. ஸ்ரீமதி அன்ராடி அவர்களின் மகன்

**ஆரம்பக் கல்வி :** களுத்துறை, புனித திருச்சிலுவை கல்லூரியில் கற்றார்.

**தியாக்கோனாக திருநிலைப்படுத்தப்பட்டது :** 19.10.2014

**இவர் தனது முதற்திருப்பலியை இம்மாதம் 19ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கலமுல்லை, புனித பிலிப் நேரிஸ் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கிறார்.**



**அருட்சகோதரர் டில்ஷான் ஜோன் லக்மால் குணவர்தன**

**பிறப்பு :** 1987 பங்குனி 15ஆம் திகதி

**பெற்றோர் :** திரு. அன்டனி குணவர்த்தன திருமதி. அன்டனட் குணவர்த்தன அவர்களின் மகன்

**ஆரம்பக் கல்வி :** நுகேகொடை, புனித சூசையப்பர் கல்லூரியில் கற்றார்.

**தியாக்கோனாக திருநிலைப்படுத்தப்பட்டது :** 19.10.2014

**இவர் தனது முதற்திருப்பலியை இம்மாதம் 19ஆம் திகதி காலை 8.00 மணிக்கு நுகேகொடை, புனித சூசையப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கிறார்.**



**அருட்சகோதரர் எரங்க லக்ஸித டி சில்வா**

**பிறப்பு :** 1985 ஆனி 1ஆம் திகதி

**பெற்றோர் :** திரு. லக்ஷ்மன் அசோக டி சில்வா, திருமதி. அசுந்தா ஸ்ரீமா டி சில்வா அவர்களின் மகன்

**ஆரம்பக் கல்வி :** பம்பிலப்பிட்டி, புனித பேதுரு கல்லூரியில் கற்றார்.

**தியாக்கோனாக திருநிலைப்படுத்தப்பட்டது :** 24.05.2013

**இவர் தனது முதற்திருப்பலியை இம்மாதம் 19ஆம் திகதி காலை 10.30 மணிக்கு முகத்துவாரம், புனித சந்தியாகப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கிறார்.**



**அருட்சகோதரர் வாஹலதந்திரிகே டொன் ஜூட் ஏஷான் சச்சித்ர பெரேரா**

**பிறப்பு :** 1986 சித்திரை 29ஆம் திகதி

**பெற்றோர் :** திரு. W.D. பியூஸ் லயனல் பெரேரா, திருமதி. W.D. என்ரிட்டா பியட்ரிஸ் பெரேரா அவர்களின் மகன்

**கல்வி :** களுஅக்கல, புனித ஜோன் பொஸ்கோ கல்லூரியிலும், பம்பிலப்பிட்டி, புனித பேதுரு கல்லூரியிலும் கல்வி கற்றார்.

**தியாக்கோனாக திருநிலைப்படுத்தப்பட்டது :** 19.10.2014

**இவர் தனது முதற்திருப்பலியை இம்மாதம் 19ஆம் திகதி காலை 8.30 மணிக்கு களுஅக்கல, சமாதான இராக்கினி ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கிறார்.**



**அருட்சகோதரர் அன்டன் சுரங்க வர்ணகுலசூரிய**

**பிறப்பு :** 1986 கார்த்திகை 22ஆம் திகதி

**பெற்றோர் :** திரு. வர்ணகுலசூரிய ஜேம்ஸ் ஹில்டன் உபாலி பெர்னாண்டோ, திருமதி. வர்ணகுலசூரிய பத்மினி பெர்னாண்டோ அவர்களின் மகன்

**கல்வி :** நீர்கொழும்பு, மாரிஸ்டெலா கல்லூரியில் கற்றார்.

**தியாக்கோனாக திருநிலைப்படுத்தப்பட்டது :** 19.10.2014

**இவர் தனது முதற்திருப்பலியை இம்மாதம் 19ஆம் திகதி காலை 8.00 மணிக்கு கடோல்கேல, கிறிஸ்து அரசர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கிறார்.**



**அருட்சகோதரர் பெனடிக்ட் சமன் ஜயமான்ன (OCist)**

**பிறப்பு :** 1981 மாசி 7ஆம் திகதி

**பெற்றோர் :** திரு. J.M கிங்ஸ்லி ஜயமான்ன, திருமதி. N.B ராணி அவர்களின் மகன்

**கல்வி :** ஸ்ரீ தர்மராம வித்தியாலத்திலும், வென்னப்புவ, புனித ஜோசப்வாஸ் கல்லூரியிலும் கற்றார்.

**தியாக்கோனாக திருநிலைப்படுத்தப்பட்டது :** 19.10.2014

**இவர் தனது முதற்திருப்பலியை இம்மாதம் 19ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு மட்டகொடுவ,நல்மரணமாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கிறார்.**



**அருட்சகோதரர் குருவிட்ட ஆராய்ச்சிகே சமில் சமீர**

**பிறப்பு :** 1983 வைகாசி 2ஆம் திகதி

**பெற்றோர் :** திரு. K.A. சோமரத்ன திருமதி. W. சிறியந்தி பெர்னாண்டோ அவர்களின் மகன்

**கல்வி :** கிம்புலாபிட்டிய ரோமன் கத்தோலிக்க பாடசாலையிலும், நீர்கொழும்பு புனித மரியாள் கல்லூரியிலும், நீர்கொழும்பு புனித பேதுரு கல்லூரியிலும் கற்றார்.

**தியாக்கோனாக திருநிலைப்படுத்தப்பட்டது :** 19.10.2014

**இவர் தனது முதற்திருப்பலியை இம்மாதம் 19ஆம் திகதி காலை 8.00 மணிக்கு கிம்புலாபிட்டிய, புனித லூர்து மாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கிறார்.**



**அருட்சகோதரர் தீலிப் சம்பத் சார்லஸ்**

**பிறப்பு :** 1987 புரட்டாதி 12ஆம் திகதி

**பெற்றோர் :** திரு. றோமன் அன்டனி சார்ல்ஸ், திருமதி. P. ஜெஸ்மின் மேரி கோமஸ் அவர்களின் மகன்

**கல்வி :** கிரான்பாஸ், புனித சூசையப்பர் கல்லூரியில் கற்றார்.

**தியாக்கோனாக திருநிலைப்படுத்தப்பட்டது :** 19.10.2014

**இவர் தனது முதற்திருப்பலியை இம்மாதம் 19ஆம் திகதி காலை 8.00 மணிக்கு முகத்துவாரம், புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கிறார்.**

**இப்புதிய அருட்தந்தையர்களை வாழ்த்தி வரவேற்பதோடு அவர்களின் பணிவாழ்வு இயேசுவின் வாழ்வாக மாறிட வாழ்த்துகின்றோம்.**

ஞான ஒளி
GNANA OLI ඥාන ඔලි

கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல 0112695984,0114899611 பெக்ஸ் 0112692586,
மின்னஞ்சல் முகவரி cgnanaoli@yahoo.com
12, சித்திரை மாதம், 2015 ஞாயிற்றுக்கிழமை.

**இறுதி இராவுணவு என்பது கிறிஸ்து தன்னை முழுவதுமாக கையளித்த இரவு எனலாம். 'உடல்' கிறிஸ்துவின் ஆள்தன்மையையும் 'இரத்தம்' கிறிஸ்துவின் உயிரையும் அடையாள முறையில் குறித்து நிற்கின்றன.**

இறைத்தந்தை தம் மீட்புத் திட்டத்தைச் செயற்படுத்த மனிதர்களில் சிலரைத் தேர்ந்தெடுத்து அவர்களுடாகச் செயலாற்றி வருவதை மீட்பு வரலாற்றில் காண முடிகிறது. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலும் கிறிஸ்துவுக்கு பிற்பட்ட காலத்திலும் பல பணியாளர்களைத் தேர்ந்தெடுத்தும் அவர்களுடாக வேறு பல உதவிப் பணியாளர்களை ஏற்படுத்தியும் இறைவன் மக்களுக்கு பணியாற்றி வருகின்றார். இறைத்தந்தையால் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்ட இயேசுவின் காலத்திலும் அவரது பணியை தொடர்ந்தாற்றிய திருத்தூ-தர்களின் காலத்திலும் திருச்சபை வரலாற்றிலும் பல பணியாளர்கள் இறைமக்களுக்கு பணியாற்றி வந்துள்ளனர். அந்த வகையில்தான் இயேசுகிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்ட திருச்சபையும் தொடர்ந்தாற்றப்பட வேண்டும் என்று விரும்பிய இயேசுகிறிஸ்து இறுதி இராவுணவின்போது குருத்துவத்தை ஏற்படுத்தி அதனை நின்று நிலைக்கச் செய்தார்.

இறுதி இராவுணவு என்பது கிறிஸ்து தன்னை முழுவதுமாக கையளித்த இரவு எனலாம். "உடல்" கிறிஸ்துவின் ஆள்தன்மையையும் "இரத்தம்" கிறிஸ்துவின் உயிரையும் அடையாள முறையில் குறித்து நிற்கின்றன. தம்மையே பலியாக்கும் கிறிஸ்துவின் உள்ளார்ந்த மனநிலை இறுதி இராவுணவின்போது சீடர்களுடன் உணவினை பகிர்ந்து உண்பதன் ஊடாக வெளிப்படுத்தப்படுகின்றது. இவ் உள்ளார்ந்த மனநிலை கல்வாரியில் சிலுவையில் இறப்பதன் ஊடாக வெளிப்படையாக வெளிப்படுத்தப்படுகின்றது. இறுதி இராவுணவு கிறிஸ்துவினுடைய முழுமையான கையளிப்பின் கொடுமுடியாக விளங்குகின்றது. அன்பே இவ்வனைத்து நிகழ்வினதும் உந்து சக்தியாக விளங்குகின்றது. "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்று தமது சீடர்களுக்கு கூறி இயேசு குருத்துவத்தை ஏற்படுத்தி அதனை தினந்தோறும் நினைவுறச் செய்தார். அதனையே இன்று எமது குருக்கள் தொடர்ந்தாற்றி வருகின்றனர். இயேசுகிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்ட இந்த குருத்துவப் பணியானது மனித வாழ்க்கையோடு ஒன்றரக் கலந்துவிட்டது என்றுதான் கூறவேண்டும். அதாவது இன்று குருக்கள் இல்லையெனில் மனித வாழ்வு மகிழ்ச்சி நிறைந்ததாக இருந்திருக்காது. பொருள் நிறைந்ததாக இருந்திருக்காது. தண்ணீரிலிருந்து தூக்கியெறிப்பட்ட மீன்களுக்கு சமமானதாக இருந்திருக்கும்.

ஆம் ஒரு மனிதன் இந்த பூமியில் பிறந்த நாள்முதல் மண்ணுக்கு செல்லும் நாள்வரையில் அதாவது ஒரு பிடி மண்ணை எடுத்து அவனை அடக்கம் செய்யும் குழியில் போடும் நாள்வரையில் அவனது வாழ்க்கையில் அனைத்து நிகழ்ச்சிகளிலும் குருக்கள் உடனிப்பதைக் காண்கின்றோம். மனிதன் பிறந்ததும் அவன் கிறிஸ்துவுக்குள் புதுப்பிறப்படைவதற்கு திருமுழுக்கு எனும் அருளடையாளத்தை பெற்றுக்கொடுக்க குரு துணை நிற்கிறார். இதுபோன்று அவன் கட்டிக்கொள்ளும் அனைத்து பாவங்களிலிருந்தும் அவனை விடுவித்து அவனை புது மனிதனாக்கி கிறிஸ்துவுக்குள் ஒப்புரவாக்கி ஒன்றிணைப்பதும் ஒரு குருதான். நற்கருணை எனும் ஆன்ம உணவை பெற்றுக்கொடுத்து உயிருள்ள கிறிஸ்துவை பெற்றுக்கொடுக்க துணை நிற்பதும் ஒரு குருதான். அவன் திருமணம் எனும் அருளடையாளத்தை பெற்றுகொள்ள சாட்சியாக இருப்பதும் ஒரு குருதான். அவனது மரணத்தறுவாயின்போது பாவம் நீக்கி வேதனைகளைக் குறைக்க துணை நிற்பதும் ஒரு குருதான். அவன் இறந்த பிறகும் அவனுக்காக மன்றாட கல்லறை வரையில் அவனோடு செல்வதும் ஒரு குருதான். இவ்வாறுதான் குருக்கள் மனித வாழ்வோடு பின்னிப்பிணைந்துள்ளனர்.

கொழும்பு உயர் மறை மாவட்டத்தில் இவ்வருடம் 17 பேர் குருத்துவ வாழ்வில் நுழையவிருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். இவர்கள் அனைவரும் கிறிஸ்து வழிநின்று கிறிஸ்துவுக்குள் பயணித்து இயேசுவின் இறையாட்சி விழுமியங்களை தமது வாழ்க்கையில் கடைப்பிடித்து சாட்சிகளாக விளங்கிடவும் அதேவேளையில் திருச்சபைக்காக உழைத்திடும் இயேசுவின் சீடர்களாக விளங்கிடவும் இயேசுகிறிஸ்துவின் குருத்துவப் பணியை தொடர்ந்தாற்றிடும் வீரத்தியாகிகளாக விளங்கிடவும் "ஞான ஒளி" உங்கள் ஒவ்வொருவரையும் வாழ்த்தி வரவேற்று நிற்கின்றது.

**இறையாசீருடன்**
**ஆசிரியர்**

# எது உண்மையான ஈஸ்டர்

திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களில் உயிர்ப்புப் பெருவிழாத்தான் எல்லா விழாக்களுக்கும் தலையான விழாவாக அமைகிறது. இந்தப் பெருவிழாவை திருச்சபையானது ஓர் இரவோடு மட்டுமன்றி ஒரு வாரக் காலமாக ஆர்ப்பரித்துக் கொண்டாடி மேலும் ஏழு வாரங்களுக்கு பாஸ்கா காலம் என்று சிறப்பிக்கின்றது.

கிறிஸ்தவ வாழ்வின் நம்பிக்கைக்கு ஊற்றாகவும், அடித்தளமாகவும் இருப்பது கிறிஸ்துவின் உயிர்ப்பு. இயேசு உயிர்த்தெழாமல் இருந்திருந்தால் நாம் கிறிஸ்தவர்களாக இருப்பதில் அர்த்தமில்லை. அதை தான் புனித பவுல் அடிகளார் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்தில் 15,17இல் கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நீங்கள் கொண்டிருக்கும் விசுவாசம் பயனற்றதே என்று கூறுகிறார்.

> “ கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை நோக்கமே கிறிஸ்துவின் உயிர்ப்புக்கு சாட்சியம் பகர்வதுதான். ”

கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை நோக்கமே கிறிஸ்துவின் உயிர்ப்புக்கு சாட்சியம் பகர்வதுதான்.

இன்றைய கால கட்டத்தில் இயேசுவின் உயிர்ப்பு, இயேசு உயிரோடு இருக்கிறார் என்பதற்கு மிகச் சிறந்த சான்று, ஒவ்வொரு கிறிஸ்தவரின் வாழ்க்கை தான் நாம் அயலானில், தம்மிடம் இருப்பதை பகிர்வதன் மூலம் தான் இயேசு உயிரோடிருக்கிறார் என்று சாட்சியம் பகர முடியும்.

முதல் நூற்றாண்டிலே ஆயிரக்கணக்-கானோர் கிறிஸ்தவர்களாக மாறியதற்கு காரணம் திருத்தூதர்களுடைய போதனைகளைக் கேட்டு அல்ல மாறாக முதல் கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் அன்பு செய்து வாழ்ந்த வாழ்க்கை முறையைப் பார்த்துதான் என்று வரலாற்றில் படிக்கின்றோம்.

எப்போது கிறிஸ்தவர்களாகிய நாம் ஒருவருக்கொருவர் உண்மையாக அன்பு செய்து வாழ்வதைப் பார்த்து, நம்மை சூழ்ந்துள்ளவர்கள் "இவர்களைப்போல் நாம் வாழ வேண்டும்" என்று நினைக்கிறார்களோ, அன்று தான் நமக்கு உண்மையான ஈஸ்டர் பெருவிழா. அன்று தான் இயேசு உயிர்த்து விட்டார் என்பதற்கு சாட்சியம் பகர்கின்றோம்.

உலகில் வாழ்ந்த ஒருவர் இறந்து மோட்சத்திற்கு செல்கிறார். உள்ளே செல்ல அனுமதிக்கும் முன் புனித பேதுரு அவரைப்பார்த்து சில கேள்விகள் கேட்கிறார். நீர் உலகில் இருந்தபோது பிறரை அன்பு செய்தீரா? அதற்கு அவர் "இல்லை" என்கிறார். ஆச்சரியத்துடன் பேதுரு உம்மையாவது அன்பு செய்தீரா? என்று கேட்கிறார். அதற்கு அவர் "என்னை கூட நான் அன்பு செய்யவில்லை" என்கிறார். அதிர்ச்சியடைந்த பேதுரு அவரைப் பார்த்து நீர் இறந்து பல வருடங்கள் ஆகிவிட்டன. ஏன் இவ்வளவு தாமதாக இங்கு வந்திருக்கிறீர்" என்று சொன்னாராம்.

"அன்பு செய்யாதவர்கள் இறந்தவர்களுக்கு சமம். அன்பு செய்யும் நேரங்களில் மட்டும்தான் உண்மையிலே நாம் வாழ்கின்றோம்.



*நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோமா? அல்லது நடைப்பிணமாக சுற்றி திரிந்து கொண்டிருக்கின்றோமா, என்று சிந்தித்துப் பார்க்க கிறிஸ்துவின் உயிர்ப்பு விழா நம்மை அழைக்கின்றது.*

அன்பில் நாம் வளர வேண்டுமானால் சுயநலத்தை அடியோடு அழிக்க வேண்டும் நம்மையே நாம் மறக்க வேண்டும். பிறரது நலம். பிறரது மகிழ்ச்சி, பிறரன்பு வாழ்வு இவற்றிற்கு எப்போது நாம் முக்கியத்துவம். கொடுத்து வாழ்கின்றோமோ அன்று தான் நாம், இயேசுவில் உயிர்ப்புக்கு சாட்சி பகர்பவர்களாவோம்.

## உண்மை உறைக்கும் — கமிலஸ்






# மாற்றங்களால் பூத்த புத்தாண்டின் நிழல்

புதிய ஆண்டு பிறக்கின்றதெனின் பலவிதமான மாற்றங்கள். புதிய ஆடைகள், புதுப் பொலிவு பெற்ற வீடுகள், வியாபாரப் பொருட்களினால் அலங்கரிக்கப்பட்ட கடைகள், பரிசுப் பொருட்கள், புதிய எதிர்பார்ப்புகள், கோள்களின் இருப்புகளில் மாற்றங்கள், தாவரங்களில், உயிரினங்களில், அவற்றின் நடத்தைகளில் மாற்றங்கள் என புறத்தில் பல மாற்றங்கள் அல்லது மாறும் கோலங்கள் நம் கண்களுக்கு புலப்படக்கூடிய மாற்றங்களாக எம்மால் நோக்கப்படுகின்றன. இப்புறப் புலன் காட்சிகள் யாவும் சிலரில் ஓர் தற்காலிக மகிழ்வை ஏற்படுத்திவிட்டு மறைந்து விடுகின்றன. அது மட்டுமன்று மீண்டுமொரு வருடம் வரும்வரை எதிர்பார்த்துக் கிடக்கும் ஆர்வத்தையும் ஏற்படுத்திவிட்டு மறைந்து கொள்கின்றன. இத்தற்காலிக மாற்றங்களோடு மகிழ்ச்சி பெறும் எண்ணங்களோடு கொண்டாட்டங்கள் செய்வோருக்கு, வருடம் பிறந்தது, உண்டு குடித்து ஆடி உள்ளவர்களுக்கு கொடுத்தோம், ஊடகங்களில் வாழ்த்தினோம் என்று தமக்குத் தாமே தற்கால திருப்திப் பெருமிதத்தோடு ஒய்ந்து விடுகின்றனர். இவர்களின் வருடக் கொண்டாட்ட மகிழ்ச்சி ஓர் எல்லைக்குட்பட்டு மீண்டும் ஓர் வருடக் கொண்டாட்ட நாளை மகிழ்ச்சிக்காக எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கும்படி விட்டுச் சென்றுவிடுகின்றது.

பல்வேறு கொண்டாட்டங்கள் எல்லாம் மனிதரின் மகிழ்ச்சிக்காகவே. புதியதாய்ப் பிறந்தது, அல்லது புதியது என்கின்றபோது அது புலனுக்கு மட்டுமன்றி அப்புலத்திற்குள் மனதுக்கு மகிழ்வைக் கொடுக்கும் புத்தூக்கக் குணங்களைத் தன்னகத்துள் கொண்டிருக்கும். அத்தகைய அனுபவத்தைக் கொடுக்கக் கூடியதே புத்தாண்டு. இத்தகைய அனுபவங்களை கொண்டு வரக்கூடிய வகையில் கால, மாற்றங்களோடும், மகிழ்ச்சிக்கான அழியா நினைவுகளை மீட்டெடுக்கும் வகையிலும் கொண்டாட்டங்கள் காலத்தையொட்டியதாக கொண்டாடப்பட்டு வருகின்றன. மனிதர்களுக்கிடையில் வேற்றுமையைக் களைந்து மனிதத்தை மதிக்கும் பண்புகளை ஒற்றுமையினூடாக கட்டியெழுப்பும் விழாக்களுக்கே மேற்சொல்லப்பட்ட வல்லமையும் சேர்ந்தமைந்திருக்கும். அதுவே சந்தேகமற்ற நீடித்த மகிழ்வைத் தரவும் வல்லது. இத்தகையவைதான் மகிழ்வளிக்கும் புத்தூக்கக் குணங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கக் கூடியவை. தற்காலங்களில் புறப்புலன்களை மட்டும் திருப்திப் படுத்தவும்,வியாபார வெற்றியை எட்டுவதற்குமான நோக்கங்கள் மேலோங்கி அவற்றை பிரதிபலிக்கவே இவற்றை தயார்படுத்தியுள்ளனர் என்று எண்ணத் தோன்றுமளவிற்கு வர்த்தக நோக்கங்கள் அங்கு மேலெழுந்து நிற்கின்றன. அது மட்டுமன்றி அரசியல் சுயலாபங்களுடன் அச்சேற்றப்படும் வாழ்த்துக்கள் அர்த்தமிழந்த வெறும் காகிதங்களாகி, தனிநபர் நாமங்களை பிரபல்யப்படுத்துவதனையே நிறைவேற்றிக் கொள்கின்றன. இவ்வாறான பின்னணியின்றி பிறத்தல்களே உண்மையான வருட பிறப்புகளாக வரவேண்டும்.

வருடம் பிறந்தால் மனமும், மாற்றமும் பிறக்க வேண்டும். புது வருடத்தின் சிறிய மாற்றம் ஒன்றே பெரும் சந்தோஷங்களை அள்ளி வழங்கக் கூடியது. பழைய பகைகள், குரோதங்கள் பறந்தோட மன்னித்தல், மறத்தல் என மாற்றத்திற்கு

> **"உறவுகள் இல்லையானால் உதிரத்திற்கு வேலையில்லை. தொடர்புகள் இல்லையானால் உறவுகள் தொடர்வதில்லை"**

இடம் வேண்டும். ஊர் கூடி உறவுகள் கூடி உள்ளத்திலிலுள்ளதை மனம்விட்டுப் பேசவேண்டும். புரிந்து மறந்து மாற்றம் பெறுவதனால் மட்டுமன்றி அவை பலரையும் மகிழ்ச்சிக் கடலில் சேர்க்கவேண்டும். விட்டொழித்தல், தேவையற்றதை அழித்தொழித்தல் அல்லது மறுக்காமல் மறத்தல், என்பவற்றால் புதிய பரலோக வாசல்கள் பல புதுவருடத்தில் திறந்து வைக்கப்படுகின்றன. பகைமையால் நீண்டகாலம் நேருக்கு நேர் நோக்காத நபர்கள் பலர் நல்ல உணர்வுகளை நசுக்கி உடலியக்க சமநிலையைக் தாமே குழப்பிக் கொள்ளாமல். சிறிய மாற்றம் ஒன்றை ஏற்படுத்த முயற்சி எடுத்தல் வேண்டும். வாய் மலர்ந்து சிரிக்க முயற்சிக்க வேண்டும். கௌரவக் கயிறுகளால் தம்மை இறுகக் கட்டிக்கொள்வதில் மாற்றத்தைக் கொண்டு வருதல் வேண்டும்.

புது வருடப் படையல் கொண்டுகளைக் கொண்டு மட்டும் புதுத் தெம்படைய எண்ணி தோல்வி காணாமல். திரும்பத் திரும்ப மற்றோரின் தீய பக்கத்தையே புரட்டிப் பார்த்துப் பார்த்து புளங்காகிதம் கொள்ளாமல் நம்மையும் பார்க்கும் மாற்றம் நமக்குள் ஏற்படுத்த வேண்டும். பிறரின் நல்ல பக்கங்களை நல்ல செயல்களை தேடிப் பார்க்கவும் பாராட்டவும் மனம் கொள்ளல் வேண்டும். சிறிய ஓர் மாற்றத்தை ஏற்றினாலென்ன? கடமைக்காக கடமை செய்பவர்கள், பணத்திற்காக மட்டும் பணிசெய்பவர்கள், உடலிச்சைக்காக மட்டும் உறவு வைப்பவர்கள், குடும்பங்களின் பிரிவுகளையே சுவைத்துக் கொண்டிருப்பவர்கள் பொய்யையே உரைத்து புளங்காகிதம் கொள்பவர்கள் மாற்றத்திற்காக தம்மில் இடம் கொடுக்க ஊக்குவிப்பதாக வருடப் பிறப்புகள் அமையவேண்டும் அதுவே நிரந்தர மகிழ்வினைத் தரக்கூடியது. கோதுமை மணிகள் மண்ணில் விழுந்து மடியாமல் புதியவைகள் தோன்றாது. இங்கு மண்ணின் இணைவின்றியும், இடம் கொடுத்தல் இன்றியும், தன்னில் மாறுதல்களை ஏற்படுத்தாமலும் கோதுமை புத்துருவம் பெற முடிவதில்லை. இங்கு மீள் பிறத்தல் என்ற தாக்குதலுக்கு கோதுமைப் பயிர் உட்படாமல் மாற்றத்திற்கு அங்கு இடமுமில்லை. மகிழ்ச்சிக்கு வழியும் இல்லை. கண்ணுக்குப் புலப்படாத அலைகளுக்கு பதிலளிக்கும் கைப்பேசி தேவையற்றதை அழித்து விடாது போனால் புதியவற்றை சேமிக்காது. மனித உடலில் மேலதிகமாக உள்ளெடுக்கப்படும் மாச்சத்து கிளைக்கோசன் என்ற இரசாயன மாற்றத்தை சந்திக்காது விட்டால் உடலின் குளுக்கோசு செறிவு மகிழ்ச்சியளிக்காது. தேவையான எதுவும் கட்டுப்பாட்டு எல்லையை மீறும்போது ஒன்றில் அழிக்கப்படல் வேண்டும் அல்லது மாற்றத்திற்குள்ளாக வேண்டும். இல்லையெனில் அசாதாரண நிலைகளே தோற்றுவிக்கப்படும்

உறவுகள் இல்லையானால் உதிரத்திற்கு வேலையில்லை. தொடர்புகள் இல்லையானால் உறவுகள் தொடர்வதில்லை. கூட்டுக்குடும்ப வாழ்வு தனிக்குடும்பமாகும் வேகம் அதிகரித்துவருகிறது தன் பெற்றோரை குடும்ப அங்கத்தினரை சந்தித்து வாழ்த்துச் சொல்லும் போக்குகள் நலிவடைந்து வருகின்றது. வார்த்தையின் வாழ்த்துக்கள் இலத்திரன் ஊடகங்களில் உறைந்துபோன வாழ்த்துக்களாக வெறும் பரிசுப்பொருளுடன் முடிவடைந்துவிடுகின்றது. மொத்தத்தில் வருடக்கொண்டாட்டங்கள் தற்காலிக மகிழ்ச்சிக்காரர்களாக விடைபெற்றுக்கொள்கின்றன. பொருளாதாரமும் உலகமயமாக்கலும் எல்லோரையும் ஒட வைத்துக்கொண்டிருக்கும் காலத்தில் இத்தகை வருடக் கொண்டாட்டங்கள் ஓரளவேனும் நல்ல நோக்கங்களை நிறைவேற்ற உதவியாக இருந்தே கொள்கின்றன. நோக்கங்கள் காரணமின்றி எல்லையை மீறும்போது மாற்றங்காணாத சமூகத்தினால் மகிழ்ச்சியை இழப்பதை தவிர வேறென்ன இருக்கின்றது. உறவு விரிசல்கள் சீர்செய்யவும் உறவுகளைத் தாங்கி மன்னித்து மறந்து மற்றவர்களின் தவறுப்பக்கங்களை விட்டு நல்ல பக்கங்களை காணமுயல்வோம். இத்தகைய எண்ணங்களோடு புத்தாடையணிவோம். எண்ணெய் தேய்ப்போம். சுத்தப்படுவோம். மனதிற்கும் மானிடத்திற்குமாக மருத்துநீர் தேடி மாற்றங்களால் பூத்துக் குலுங்கும் புத்தாண்டு நிழலில் புது சுகம் காண்போம்.

**இராஜேந்திரம் தங்கராஜா**
**மறையாசிரியர்**
**புனித லூசியாள் பேராலயம்**
**கொட்டாஞ்சேனை**
**கொழும்பு – 13**




செக்கடிதெரு புனித அன்னம்மாள் ஆலயத்தில் புனித வார வழிபாட்டில், முதல் கட்டமாக பெரிய வியாழன் திருவழிபாட்டு நிகழ்வு கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகையின் தலைமையில் இடம்பெற்றது. அன்றைய திருவழிபாட்டின் முக்கிய நிகழ்வான பாதங்கள் கழுவும் சடங்கை ஆயர் அவர்கள் நடத்துவதையும், அடுத்த நாள் புனித வெள்ளியன்று திறந்தவெளி சிலுவைப்பாதையில் மக்கள் பக்தியோடு பங்கேற்பதையும் படத்தில் காணலாம்.

*தகவல் மற்றும் படங்கள் : டிக்சன், செக்கடித்தெரு*



புனித அவிலா திரேசாவின் 500வது பிறந்த நாளை முன்னிட்டு (1515.03.28) இலங்கையில் கார்மேல் சபையினர் தங்கள் குழுவாழ்வை முதன் முதலாக தொடங்கி 28.03.2015 அன்றைய தினம், புனித அவிலா தினரேசாவின் பிறந்த நாளை நன்றித்திருப்பலியோடு கொண்டாடினார்கள். அன்றைய தினம் திருப்பலியை கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயர், இச்சபையின் அருட்தந்தையர்கள் அருட்தந்தை பீட்டர் சூசைராஜ், மற்றும் லூயிஸ் அடிகளாரும் இணைந்து திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்.



அருட்பணி. அந்திரியாஸ் பர்னாந்து அ.ம.தி

# அருளடையாளங்கள் ஓர் அலசல் 16



# தேவநற்கருணை

## நற்கருணைப் பக்தி முயற்சிகள்

அப்பம் பிட்கும் சடங்காக, நற்கருணை விருந்தாக, கல்வாரிப் பலியாக பல வளர்ச்சி படிமுறைகளை கண்ட நற்கருணை காலப்போக்கில் பல பக்தி முயற்சிகளையும் தன்னகத்தே கொண்டிருந்தது. திருப்பலிக்கு புறம்பாக பல பக்தி முயற்சிகள் வளர்வதற்கு வெவ்வேறு காலங்களில் உண்டான இறையியல் வாதங்கள் களம் அமைத்திருந்தன. மேலும் திருவழிபாட்டின் புரிதலில் ஏற்பட்ட வளர்ச்சி மாற்றங்களும் இதற்கு வழி சமைத்தன. நற்கருணை பக்தி முயற்சிகளை நான்கு பெரும் பிரிவுகளாக வகுக்கலாம்.

1. நற்கருணை ஆண்டவரைச் சந்திக்கச் செல்தல்.
2. நற்கருணை ஆண்டவர் பவனி.
3. நற்கருணை ஆண்டவர் எழுந்தேற்றம்.
4. நற்கருணை ஆண்டவர் ஆசீர்வாதம்.

### 1. நற்கருணை ஆண்டவரைச் சந்திக்கச் செல்தல்.

தொடக்க கால திருச்சபையில் ஆண்டவர் உயிர்த்த நாளாகிய ஞாயிறு தினம் மட்டுமே திருப்பலி கொண்டாடப்பட்டது. நோயாளர் இறக்கும் தருவாயில் இருப்போர் மற்றும் திருப்பலிக்கு சமூகமளிக்காதோர் நற்கருணை பெறுவதற்காக நற்கருணை ஒதுக்கப்பட்டது. இது மிகவும் பழமையான ஓர் பழக்கம். மேலும் வார நாட்களில் திருப்பலி இல்லாத சூழ்நிலையிலும், அன்றாடம் நற்கருணை உட்கொள்ள விரும்பினர். எனவே இதற்கு தேவையான நற்கருணையைப் பொதுநிலையினரே தம் வீடுகளுக்கு எடுத்துச் செல்லத் திருச்சபையால் அனுமதிக்கப்பட்டிருந்தனர். எனவே மக்கள் தங்கள் வீடுகளிலேயே நற்கருணையைப் பாதுகாப்புடன் வைத்திருந்து, அதைப் பக்தியுடன் உண்டனர். இது கிட்டத்தட்ட 8ம் நூற்றாண்டு வரை நீடித்தது. இதன் பிற்பாடு மக்கள் நற்கருணையை வீடுகளுக்கு எடுத்துச் செல்வது பல்வேறு காரணங்களுக்காக தடைசெய்யப்பட்டது. இதில் முக்கியமானது இதுவரை மக்கள் மையமாக இருந்த திருவழிபாட்டுக் கொண்டாட்டங்கள் சிறிது சிறிதாக குருக்கள் மையம் கொண்டாட்டங்களாக மாறின. குருக்கள் அர்ப்பணிக்கப்பட்டவர்கள். எனவே அவர்கள் மாத்திரமே நற்கருணையைத் தொடமுடியும் மக்கள் தம் கைகளால் நற்கருணையைத் தொடக்கூடாது என்ற நிலை உருவானது. ஆகவே நோயுற்றோர் திருப்பயண உணவாக உட்கொள்வோர்க்காக ஒதுக்கப்பட்ட நற்கருணையை பாதுகாப்பாக வைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. ஆகவே 9ம் நூற்றாண்டு அளவில்

(அ) முதலில் ஆலய திருப்பண்ட அறை (Sacristy) யில் பாதுகாப்பாக வைக்கப்பட்டது.
(ஆ) பிறகு பீடத்திற்கு மேல், கீழ்நோக்கி தொங்கும் உரிபோன்ற அமைப்பில் பாதுகாப்பாக வைக்கப்பட்டது.
(இ) அடுத்து திருப்பலிக்குப் பிறகு நடுப்பீடத்தின் மீது வைக்கப்பட்டது
(ஈ) இறுதியாக 11ம் நூற்றாண்டளவில் சுவற்றில் அமைக்கப்பட்ட பேழையில் நற்கருணை வைத்துப் பாதுகாக்கப்பட்டது. இவ்வாறுதான் நற்கருணை பேழை உருவாகியது.

மேலும் நற்கருணை கொண்டாட்டம் ஒரு திருவிருந்து என்ற நிலை மாறி அது ஆராதனைக்குரிய பொருள் என்ற புரிதல் ஏற்பட்டது. ஏன் இந்நிலை?

(அ) திருவழிபாடு குருக்கள் மையப்படுத்தப்பட்டது.
(ஆ) திருவழிபாட்டில் இலத்தீன் மொழி அதிகமதிகமாக அறிமுகப்படுத்தப்பட்டது.
(இ) குருக்கள் அர்ப்பணிக்கப்பட்டவர்கள். ஆகவே புனிதமானவர்கள். மக்கள் உலக காரியங்களில் ஈடுபடுகின்றனர் என்ற வேறுபாடு இருவரிடையேயுள்ள இடைவெளியை பெரிதாக்கியது. இதன் விளைவு "கிராதி" (Communion Rails) அமைக்கப்பட்டது.
(ஈ) மக்கள் பங்காளிகள் என்ற நிலையிலிருந்து பார்வையாளராக மாற்றப்பட்டனர்.

இதனால் நற்கருணை பெறுவோர் எண்ணிக்கை குறைந்தது. அப்படி உட்கொள்ள முன் வந்தவர்களும் தங்கள் கைகளில் பெறாமல் நாவில் வைக்க குருவைக் கேட்டனர். மக்கள் நற்கருணை பெறுவதை விட பார்ப்பதற்கு ஆர்வம் கொண்டனர். இக்காலகட்டத்தில் தான் நற்கருணை பற்றிய சர்ச்சைகளும், கருத்து மோதல்களும் கிளம்பின. எனவே மக்கள் மத்தியில் நற்கருணை மீதுள்ள நம்பிக்கையை வளர்க்க பல்வேறு பக்தி முயற்சிகள் தொடங்கப்பட்டன. எனவே நற்கருணையை பார்க்கத் தொடங்கினர். திருப்பலியின் போதும் அது முடிந்த பிறகும் நற்கருணையை ஆராதனை செய்யும் பழக்கம் வேகமாக பரவியது. நிறுவன வார்த்தைகளுக்கு முன் நற்கருணையை மக்களுக்கு காட்டாது. பின்னர் மக்கள் நற்கருணையை ஆராதிக்கும் பொருட்டு உயர்த்திப் பிடிக்க வேண்டுமென தன் குருக்களுக்கு பாரீஸ் நகர ஆயர் கட்டளையிட்டார். 12ம் நூற்றாண்டில் இவ்வாறு நற்கருணையை உயர்த்திக் காட்டுவது ஐரோப்பா முழுவதும் பரவியது. இதனால் நற்கருணையைப் பார்த்து தாழ்ந்து பணிந்து ஆராதிப்பதே மக்களுக்கு முக்கியமாயிற்று. ஆகவே நற்கருணையை ஆராதிக்க மக்கள் ஒரு கோவிலில் இருந்து இன்னுமொரு கோவிலுக்கு படையெடுத்தனர். சில குருக்கள் மக்கள் கண்குளிரப் பார்ப்பதற்காக நீண்டநேரம் நற்கருணையை தூக்கிப் பிடித்தார்கள். அப்போது மணிகள் ஒலித்தன. இவ்வாறு நற்கருணை ஆண்டவரைப் பெறாமல், பார்த்து நிறைவு கொண்டனர். 13ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து நற்கருணை ஆண்டவரை சந்திக்கச் செல்லும் பழக்கம் உருவானது. நற்கருணை பேழையில் வைக்கப்பட்டிருக்கும் நற்கருணை ஆண்டவரை, திருவழிபாட்டு நேரத்திற்கு புறம்பாக சென்று ஆராதிக்கும் பழக்கம் குருக்கள், துறவிகளிடையே உருவானது. பின் மக்களும் இதற்குப் பழக்கப்பட்டனர். என்ன காரணம்? நற்கருணையில் இயேசுவின் உருவம் தெரிகிறது, இரத்தம் வடிகிறது, அபூர்வ சக்தி வெளிப்படுகின்றன என்ற கதைகள் மக்கள் மத்தியில் பரவின. நற்கருணை பேழை வழிபாட்டில் தனி இடம் பெற்றது. அதனை ஆராதனை செய்யும் பழக்கமும் அதிகரித்தது. மேலும் நற்கருணை நாதர் ஆலயத்தில் நமக்காக காத்திருக்கின்றார் என்ற உணர்வும் இதற்கு காரணமாகியது இயேசுவோடு நாம் கொண்டுள்ள தனிப்பட்ட உறவை வளர்க்கும் அருளடையாளமாக மாறியது.

### 2. நற்கருணை ஆண்டவர் பவனி. [கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தப் பெருவிழா]

நற்கருணைப் பெருவிழா நற்கருணை பக்தியின் பின்னணியில் எழுந்த ஒன்று. நற்கருணைப் பக்தியானது அர்ச்சிக்கப்பட்ட அப்பத்தில் இயேசு முழுமையாக இருப்பதை வலியுறுத்தி, நற்கருணையில் இயேசு மெய்யாகவே இருக்கின்றார் என்கின்ற விசுவாசத்தை வளர்க்கின்றது. வரலாற்றின் இடைக்காலங்களில் நம்பிக்கை கொண்ட ஆண்கள், பெண்கள் நற்கருணை பக்தி இயக்கத்தை தீவிரமாக நடத்தினர். இதில் மரி (Mare of Oignies) என்ற பெல்ஜிய பெண்மணி தீவிரமாக இயங்கி வந்தார். இந்தக் காலகட்டத்தில் தான் 1209ஆம் ஆண்டு லியேச் (Liege) நகரத்து அகுஸ்தீனார் துறவறச் சபையை சேர்ந்த துறவி அருட்சகோதரி ஜீலியானா ஒரு தெய்வீக காட்சி கண்டார். இக்காட்சிதான் கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தப் பெருவிழா உருவாவதற்கு காரணமாய் இருந்தது. அவருடைய காட்சியில் அவர் நிலவின் மின்னொளியைக் கண்டார். அந்நிலாவில் ஒரு சிறு கரும்புள்ளி காணப்பட்டது. திருவழிபாட்டு ஆண்டில் கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தப் பெருவிழா கொண்டாடப்படாத குறையினை இக்காட்சி வழியாக செய்தி சொல்லப்பட்டது. 1246இல் லீஜ் மறைமாநிலத்தில் இவ்விழா அறிமுகப்படுத்தப்பட்டாலும் 1264இல் திருத்தந்தையாக பொறுப்பெற்ற நான்காம் அர்பன் இவ்விழாவை முழு திருச்சபையும் கொண்டாட பணித்தார். 14ம் நூற்றாண்டில் இருந்து இத்திருவிழா புதிய செல்வாக்கோடு மக்கள் மத்தியில் கொண்டாடப்பட்டு வருகிறது. நற்கருணையில் இயேசுவின் பிரசன்னம் "உண்மையான பிரசன்னம்" என்பதை வலியுறுத்தும் வகையிலும் இது மக்கள் விழாவாக மாறியுள்ளது. இவ்விழாவின் சிறப்பம்சமாக அமைவது நற்கருணை பவனி. நாம் வாழும் சூழலில் இறைவனுடைய உயிருள்ள பிரசன்னம் பவனி வருவது மக்களுக்கு நம்பிக்கையூட்டும் செயல்பாடாகும். மீட்பின் வரலாற்றில் மக்களோடு கடவுள் உடன் இருந்ததை திருவிவிலியத்தில் வாசிக்கும் நாம் அதே கடவுளின் உடனிருப்பை நற்கருணையில் உணர்ந்து கொள்ள இவ்விழா உதவுகிறது.

### 3. நற்கருணை ஆண்டவர் எழுந்தேற்றம்.

திருப்பலி இடம்பெறும் பொழுது இயேசுவின் வசீகர வார்த்தைகளுக்குப் பிறகு நற்கருணை உயர்த்திக் காட்டப்பட்டு மக்கள் ஆராதனை செய்தனர். இது "கண்களின் திருவிருந்து" (Oculor Communion) என்றும் அழைக்கப்பட்டது. நற்கருணை ஆண்டவரை பார்க்கும்போது அவரை உற்றுநோக்கும் போது மன அமைதி, ஆறுதல், மற்றும் உடல், உள் நன்மைகள் ஏற்படுகின்றன என்ற நம்பிக்கை மக்களிடையே பரவ ஆரம்பித்தது. கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தப் பெருவிழா இப்பழக்கத்திற்கு மெருகூட்டியது. இதனால் திருப்பலிக்கு புறம்பேயும் நற்கருணை எழுந்தேற்றம் "கண்களின் ஆராதனை" இடம்பெற்றது. மக்கள் தம் வசதிக்கேற்ப தனியாகவோ, அல்லது குழுவாகவோ சில நிமிடங்கள் அல்லது பலமணி நேரமோ செலவிட்டார்கள். இன்று கூட நற்கருணை ஆண்டவர் முன் பலர் செபிப்பதை, அமைதியாக அமர்ந்திருந்து தியானிப்பதை காணக் கூடியதாக உள்ளது. நற்கருணை ஆண்டவர் நற்கருணைப் பாத்திரத்தில் (Monstrance) எழுந்தேற்றம் பண்ணப்பட்டிருக்கும்.

### 4. நற்கருணை ஆண்டவர் ஆசீர்வாதம்.

மேற்கூறிய மூன்று பக்தி முயற்சிகளும் திருப்பலியை மூலமாகக் கொண்டது. நற்கருணை ஆசீர்வாதம், திருப்புகழ்மாலையோடும், கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தப் பெருவிழாவோடும் தொடர்புடையது. 13ம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட மக்கள் ஆன்மீகமாகிய காலைச் செபம் முதலில் மரியன்னைக்குரிய பக்தி முயற்சியாகிய இச்செபங்கள் 14ம் நூற்றாண்டு தொடங்கி நற்கருணை ஆண்டவர் முன்பாக சொல்லப்பட்டன. இச்செபத்தின் நிறைவில் மக்களுக்கு ஆசீர் வழங்கப்பட்டது. இந்த இரண்டு காரணங்களையும் உற்றுநோக்கும் பொழுது நற்கருணை ஆசீர் இன்னுமொரு வழிபாட்டினை நிறைவுக்கு கொண்டு வருவதாக அமைகிறது. நற்கருணை எழுந்தேற்றம் பண்ணப்பட்டு, பாடல்கள், செபங்கள், விவிலியப் பகுதி போன்றவை இடம்பெற்று இறுதியில் ஆசீரோடு நிறைவுறவேண்டும்.

தொடரும்...

குடும்பம் அங்கம் 94

குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

# குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா
உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.



# எதிர்காலக் கவலையை வெறுமையாக்கல்

கிறிஸ்து உயிர் வாழ்கிறார். அவரே எமது வாழ்வின் விசுவாசத்தின் அத்திவாரம். அவர் என்றும் மாறாதவர். காண முடியாத இறைவனின் காணும் தோற்றம் இயேசுக்கிறிஸ்துவே. எல்லாப் படைப்புக்களிலும் முதற்பிறப்பு அவரே. எல்லாவற்றிலும் ஆரம்பமும், முடிவுமாய் இருக்கிறார்.

நாம் கடந்தகாலக் கசப்பான சம்பவத்திலிருந்து வெறுமையாக வேண்டும். அது மட்டுமல்ல, கடந்தகால மகிழ்ச்சியான சம்பவத்திலிருந்தும் வெறுமையாக வேண்டி வரலாம்.

உதாரணமாக : ஒருவர் கிறிக்கற் மச் பார்க்கச் செல்கிறார். அதில் அவரது பக்கம் வென்றுவிட்டது. வீட்டுக்கு வரும்போது மனைவி சுகயீனமாகப் படுக்கையில் படுத்திருக்கிறார். அவரது மனதில் தாம் வென்றுவிட்டோம் என்ற சந்தோசமான செய்தியை மனைவிக்குக் கூறவேண்டும் என்ற ஆசை வருகின்றது ஆனாலும் அவர் அதிலிருந்து வெறுமையாகி நோயில் இருக்கும் மனைவியோடு ஒன்றிக்கிறார்.

ஒன்றிப்புக்குத் தடையாக இருப்பது கடந்தகால சகப்பான சம்பவங்கள் மட்டுமல்ல, நீங்கள் நாளைக்குப் போக இருக்கும் பயணத்தைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தால் அந்த நேரம் கேட்டுக் கொண்டிருக்கும் உரையோடு ஒன்றிக்க முடியாது.

நடந்தவைகள் இனி வரப்போவதில்லை. நாளைய தினம் இன்னும் வரவில்லை. எமக்குச் சொந்தமாகவில்லை. ஆகவே எதிர்காலத்தில் அல்லது இறந்த காலத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதால் எனக்கு இக்கணம் இல்லாமல் போகின்றது. அது எனது வாழ்வில் பெரியதொரு நட்டமாகிறது.

எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்படவேண்டாம் என்று இயேசுநாதர் கூறுகிறார். மத் 6:25-35 வரை அழகாக கூறப்படுகிறது. "உயிர்வாழ எதை உண்பது எதைக் குடிப்பது என்றோ உடலுக்கு எதை உடுத்துவது என்றோ நீங்கள் கவலை கொள்ளாதீர்கள். உணவை விட உயிரும், உடையை விட உடலும் உயர்ந்தவை அல்லவோ........ ஆகவே அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள். அப்போது இவை அனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும். ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதீர்கள். ஏனெனில் நாளைய கவலையைப் போக்க நாளை வழி பிறக்கும். அந்தந்த நாளுக்கு அன்றன்றுள்ள தொல்லையே போதும்".

இறைவன் இருக்கிறார் என்ற விசுவாசம் மட்டும் இருந்தால் போதாது, அவர் என்னைப் பார்த்துக் கொள்வார் என்ற விசுவாசமும் வரவேண்டும். இங்கே முயற்சி எடுக்கவேண்டாம் என்று கூறுகிறாரா? இல்லை. முயற்சி எடுங்கள். ஆனால் கவலைப்படவேண்டாம் என்று கூறுகிறார். நீங்கள் மற்றவர்களைக் கவனியுங்கள். நான் உங்களைக் கவனிக்கிறேன் என்கிறார்.

நிகழ்காலத்தில் வாழும் வாழ்வுக்கு அமைதி, ஒற்றுமை, பாதுகாப்பு இருத்தல் வேண்டும். கடந்தகாலப் பாவச்சுமையை இறக்கிவை. உனக்கு மன்னிப்பளிக்க அப்பா ஒருவர் இருக்கிறார். எதிர்கால ஆவல்களை இறக்கிவை. உனது எதிர்காலத்தை ஆசீர்வதிக்க இறை அப்பா இருக்கிறார். உண்மையான பாதுகாப்பு எங்கேயுண்டு? இறைவனை முழுமையாக விசுவசிக்கும் இடத்திலேயே உண்மையான பாதுகாப்புண்டு. உண்மையான ஒற்றுமை எங்கேயுண்டு? கிறிஸ்துவைத் தேடும் இடத்தில் உண்மையான ஒற்றுமையுண்டு.

உண்மையான அமைதி எங்கேயுண்டு? கடந்தகாலத்தைப் பற்றிக் கவலைப்படாத இடத்திலும், எதிர்காலத்தைப் பற்றிப் பயப்படாத இடத்திலும் உண்மையான அமைதியுண்டு. இப்படி வாழ்ந்தால் நோய்கள் குணமாகும். நாம் செய்ய வேண்டியதை நாம் செய்ய வேண்டும். எம்மால் செய்ய முடியாததை இறைவனிடம் பாரம் கொடுக்க வேண்டும்.

இறையரசைத் தேடுவது என்பது கிறிஸ்துவைத் தேடுவதாகும். அவரது சாயலை எனக்குள் உருவாக்க எமக்குத் தாகம் தேவை. அப்போதுதான் இறையரசையும், அவரது நீதியையும் தேடுகின்ற தேடல் முழுமையடையும்.

தொடரும்...

# "தேவகுமாரன் திருமுகம் பார்த்தேன், உயிரோடிருந்தார், உரையாடினாரே"

**(இயேசு காவியம் 143:10)**



சகோ. டிலோய்ட்சன் பெர்ணாண்டோ

கத்தோலிக்கத் திருச்சபையானது இயேசுக்கிறிஸ்துவின் உயிர்ப்புப் பெருவிழாவினை பெரும் மகிழ்வுடன் கொண்டாடுகின்றது. உயிர்ப்பு என்பது இறப்பிலிருந்து பெறுகின்ற நித்திய வாழ்வை குறிக்கின்றது. அந்த வகையில் சாவை வென்ற ஒரே மனிதன் நம் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து மட்டுமே. கிறிஸ்துவின் உயிரற்ற உடலை மண் தீண்டவில்லை. படைத்தவரை அது பகைக்கவில்லை. மாறாக சாவை வென்று சத்தியன் உரைத்தபடியே உயிர்த்தெழுந்தார். இயேசுக்கிறிஸ்துவின் பாடுகள் மரணத்தில் எம் வாழ்வை தியானித்த நாங்கள் இன்று இயேசுக்கிறிஸ்துவின் உயிர்ப்பில் பங்கு கொள்கின்றோம் என்றால் அது நம் வாழ்விற்கு தரும் ஒரு அழைப்பாக உள்ளது.

உயிர்ப்பு விழா ஒரு பரிசு
உயிர்ப்பு ஒரு நம்பிக்கையின் பரிசு
உயிர்ப்பு சமாதானத்தின் பரிசு....
உயிர்ப்பு அன்பின் பரிசு...

"கோதுமை மணி மண்ணில் வீழ்ந்து மடிந்தால் ஒழிய அது பலன் கொடாது" அது பலன் கொடுக்க இறைவனில் ஒன்றிக்க வேண்டும். கிறிஸ்தவர்களுக்கு வாழ்வு மாறுபடுகின்றதேயன்றி அது அழிக்கப்படுவதில்லை. இயேசுக்கிறிஸ்துவின் உயிர்ப்பு எம் விசுவாச வாழ்விற்கு ஒரு ஊன்றுகோலாக இருக்கின்றது. இதனை புனித பவுலடியார் எமக்கு மிகத் தெளிவாக தன் மடலில் குறிப்பிடுகின்றார். "அவர் இறந்தது போலவே நாமும் அவரோடு ஒன்றித்து இறந்தோமெனில், அவர் உயிர்த்தெழுந்தது போலவே நாமும் அவரோடு ஒன்றித்து உயிர்த்தெழுவோம்" (உரோமர் 6:5). இயேசு சாவின் மேல் அதிகாரம் கொண்டிருந்தார். ஆகவே தான் இறந்த லாசரை கல்லறையினின்று உயிர்த்தெழச் செய்தார். கிறிஸ்துவில் ஒன்றுபட்டு வாழும் நாம் பாவ வாழ்விலிருந்து விடுபட்டு புதுப் படைப்பாக மாறி உயிர்ப்பு பெற வேண்டும் என்றே கிறிஸ்து விரும்புகின்றார். "கிறிஸ்துவுடன் நாம் இறந்தோமாயின் அவரோடு வாழ்வோம் என்பதே நாம் கொண்டுள்ள நம்பிக்கை"(உரோமர் 6:8) என்று புனித பவுலடியார் விபரிக்கின்றார்.

இயேசு உயிர்த்த பின் அவர் பலருக்கு தோன்றி காட்சி கொடுத்தார். மகதலேன் மரியாளுக்கு, யோவானுக்கு, தனது சீடர்களுக்கு தன்னை சுற்றியுள்ள அனைவருக்கும் தன் உயிர்ப்பின் விசுவாசத்தை எடுத்துக் காட்டுகின்றார். இயேசு உயிர்த்த பின் கொடுத்த காட்சிகள் யாவும் புதுவாழ்விற்கு அடையாளமாக உள்ளது. கிறிஸ்துவின் உயிர்ப்பு என்பது சீடர்களுக்கு இயேசுவை பின் சென்றவர்களுக்கு ஒரு விசுவாசம். (லூக் 24:21-24). இயேசு தன் சீடர்கள் மேல் ஊதி "தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்" (யோவான் 20:22) என்று கூறி ஆவியைக் கொடையாக அளிக்கின்றார். தூய ஆவியைக் கொடுத்தார் என்பது புது வாழ்விற்காக பழைய வாழ்வை களைந்து வாழ்வதன் அடையாளமாக உள்ளது. எனவே நாமும் இத்தவக்காலத்தில் செய்த ஒறுத்தல் முயற்சிகள் வழியாக எம் வாழ்வையும் சீராக்கினோம் எனவே பாவ வாழ்வை விட்டு விலகி ஒப்புரவு அருளடையாளத்தின் வழியாக உயிர்ப்பு பெற முடியுமென்பதை இயேசு நினைவூட்டுகின்றார்.

நம் ஆண்டவர், இறந்தோரின் கடவுள் அல்ல மாறாக அவர் "வாழ்வோரின் கடவுள்". அவர் வழியாக நாம் புது வாழ்விற்குள் வாழ்விக்கப்படுவோம். அதற்கு நாம் கடவுளின் ஆவியில் வாழ வேண்டும். கிறிஸ்துவோடு வாழ்ந்தவர்கள் உயிர்ப்பிற்கு பின் எப்படி கண்டார்கள் என்பதை தி.பணி 10:42 கூறுகிறது. கிறிஸ்துவின் உயிர்ப்பில் பங்கு கொள்ள அதற்கு சாட்சிகளாய் திகழ நாம் அழைக்கப்படுகின்றோம். புனித பவுலடியார் கூறுவது போல வாழ்வது நானல்ல என்னில் கிறிஸ்துவே வாழ்கின்றார் என்ற மனநிலையுடன் வாழ எம் வாழ்வை திடப்படுத்துவோம்.

"உயிர்ப்பு உணர்வுகள் முடிவடையாமல் புதிய தொடக்கத்திற்கு வழிகாட்டுவதாக, சகோதரத்துவமும் அமைதியும் கொடுக்கலும் வாங்கலுமே உயிர்ப்பின் உயிர்மூச்சு. இதுவே நம்பிக்கை அன்பு மகிழ்ச்சி நிறைந்த வாழ்வாகும்".

**உங்கள் அனைவருக்கும் கிறிஸ்துவின் உயிர்ப்பு பெருவிழா வாழ்த்துக்கள்.**

# ஞாயிறு சிந்தனை



பேதுரு

## பாஸ்கா காலத்தின் 3வது ஞாயிறு 19.04.2015

**வாசக விளக்கம்:** பாஸ்கா காலத்தின் மூன்றாவது ஞாயிறு தினமான இன்று இயேசுவைப் பற்றி பேதுரு ஆற்றிய அறிவுரையின் ஒரு பகுதியாக இன்றைய முதல் வாசகம் அமைந்துள்ளது. அவர் யூதத்தலைவர்களுக்கும் மக்களுக்கும் ஆற்றிய உரையில் இயேசு கிறிஸ்து பாடுபட்டார் இறந்தார். உயிர்த்தார் என்ற பேருண்மையை விளக்குகின்றார் யோவான் எழுதிய முதல் திருமுகத்தில் இருந்து வரும் இன்றைய இரண்டாம் வாசகம் இயேசுவை மெசியாவாகவும் மனிதராகவும் ஏற்றுக்கொள்ள மறுத்தவர்களுக்கு பதிலடி கொடுப்பதாக அமைந்துள்ளது. நற்செய்தியில் இயேசு திருத்தூதர்களுக்குத் தோன்றி அவர்களைத் திடப்படுத்துவதையும் இயேசுவின் வாழ்வுக்கும் வார்த்தைக்கும் அவர்களே சாட்சி என்று வாக்களிக்கப்பட்ட உன்னத ஆவி அவர்களை நிரப்பும் என்றும் கூறப்படுவதை பார்க்கின்றோம். உங்களுக்கு சமாதானம் என்ற இயேசுவின் வார்த்தைகள் இயேசுவால் மட்டுமே நமக்கு உண்மையான சமாதானத்தை கொடுக்க முடியும் என்பதை புலப்படுத்துகின்றன என்பதை உணர்ந்தவர்களாக நாம் வாழும்போது கடவுளின் அருள் தானாக நம்மை நிரப்பி வல்லமையில் வழிநடத்த இதற்கு வேண்டிய அருளை வேண்டிட பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் : தி.ப 3:13-15, 17-19**

வாழ்விற்கு ஊற்றானவரை நீங்கள் கொன்று விட்டீர்கள். ஆனால் கடவுள் அவரை உயிரோடு எழுப்பினார்

**பதிலுரைப்பாடல்**

உமது முகத்தின் ஒளி எம்மீது வீசச் செய்யும் ஆண்டவரே

**இரண்டாம் வாசகம் 1 யோவா 2:1-5**

நம் பாவங்களுக்கு கழுவாய் அவரே, அனைத்துலகின் பாவங்களுக்கும் கழுவாய் அவரே.

**நற்செய்தி வாழ்த்தொலி**

அல்லேலூயா அல்லேலூயா ஆண்டவராகிய இயேசுவே மறைநூலை எங்களுக்கு விளக்கியருளும் நீர் எம்மோடு பேசும்போது எம் உள்ளம் பற்றிய எரியச் செய்தருளும். அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : லூக் 24:35-48**

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

உயிர்ப்பின் மகிழ்ச்சியை உலக மக்கள் அனைவருக்கும் பறை சாற்றும் திருச்சபையையும், எமது திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவியர், பொது நிலையினர் ஆகிய அனைவருக்கும் சமாதானத்தின் வல்லமையையும் வழங்கி வழிநடத்தியருள வேண்டுமென்று...

எமது நாட்டின் சமாதானத்திற்காக நாட்டின் தலைவர்களும், மக்களும் நேரிய உள்ளத்துடன் செயல்படவும் கடந்தகால தவறுகளை மீண்டும் செய்யாமல் மறந்து மன்னித்து மனம் மாறி நாட்டின் வளர்ச்சியில் அக்கறையுடன் செயல்பட வேண்டிய வரங்களை தந்தருள வேண்டுமென்று...

உயிர்த்த இயேசு சீடர்களைத் திடப்படுத்தியது போல் நம்மையும் திடப்படுத்துகின்றார். அஞ்சாதே கலங்காதே எனத் தேற்றுகிறார் இதை உணர்ந்து நாமும் உயிர்த்த இயேசுவின் சாட்சிகளாக இயேசுவின் வார்த்தைகளை வாழ்ந்திட வேண்டிய வரங்களை தந்தருள வேண்டுமென்று...

## பாஸ்கா காலத்தின் 4வது ஞாயிறு 26.04.2015

**வாசக விளக்கம்:** எமது வாழ்விலே பிறப்பு முதல் இறந்து இறைவனில் இளைப்பாறும் வரை வளமும், நலமும், அருளும் இயேசுவே நுழைவாயிலாய் இருக்கிறார். ஏனெனில் அனைவரும் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அவர் இவ்வுலகிற்கு வந்தார். தலைமைச் சங்கத்தாருக்கு பேதுரு ஆற்றிய உரையில் இயேசுவின் மூலமாகவே உலகம் மீட்புப் பெற முடியும் என்று முதல் வாசகத்தால் கூறுகிறார். தந்தையாகிய இறைவன் நம்மிடம் கொண்டிருந்த எல்லையில்லா அன்பு இயேசு கிறிஸ்துவின் மூலம் முழுமையாக வெளிப்பட்டுள்ளது என இரண்டாம் வாசகத்தில் யோவான் குறிப்பிடுகின்றார். நற்செய்தியில் இயேசு தன்னை நல்ல ஆயனாக உருவகப்படுத்தி பேசுகின்றார். அத்துடன் போலி ஆயர்களைப் பற்றியும் குறிப்பிடுகின்றார். என் ஆடுகளை நானறிவேன் அவையும் என்னை அறியும் என்றும் நாமும் நம்முடைய வார்த்தையாலும் வாழ்வாலும் இயேசுவின் பாதையில் நடக்க இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் : தி.ப 4:8-12**

இயேசுவினாலே அன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை.

**பதிலுரைப்பாடல்**

கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டடத்தின் மூலைக்கல் ஆயிற்று.

**இரண்டாம் வாசகம் 1 யோவா 3:1-2**

கடவுள் இருப்பதுபோல் அவரைக் காண்போம்

**நற்செய்தி வாழ்த்தொலி**

அல்லேலூயா அல்லேலூயா நல்ல ஆயன் நானே, நானும் என் ஆடுகளை அறிந்திருக்கிறேன். என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன என்கிறார் ஆண்டவர் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : யோவான் 10:11-18**

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

நல்ல ஆயன் இயேசுவை தலைவராகக் கொண்டு இயங்கும் திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் ஆகிய அனைவருக்கும் நல்லாயனின் பண்புகளை வழங்கி வழி நடத்தியருள வேண்டுமென்று....

எமது நாட்டை ஆள்வோரும் பொறுப்பு வாய்ந்த தலைவர்களும், நல்ல ஆயனின் குண நலன்களைப் பின்பற்றி மக்கள் நலப் பணிகளில் ஈடுபடவும், மக்களுக்காக அர்ப்பணிப்புடன் சேவை செய்யவும், நாட்டின் வளர்ச்சிக்காக தம்மைத் தியாகம் செய்யவும், வேண்டிய நல்ல மனதைத் தந்தருள வேண்டுமென்று

நல்லாயனாம் இயேசுவை நாம் முழுமனதுடன் பின்பற்றவும், அவரது அன்பை புரிந்து கொள்ளவும், சமூகத்தில் நமக்கு உள்ள கடமைகளை புரிந்துகொண்டு அவற்றை நிறை வேற்றவும், நாமும் நல்லாயனாக வாழ அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை ஏற்று வழிநடக்கவும் தேவையான வரங்களை தந்தருள வேண்டுமென்று...

# இரத்தினப்புரி மறைமாவட்டத்தில் நடைபெற்ற தவக்கால நிகழ்வுகளில் இருந்து...



## இரத்தினப்புரி மறைமாவட்ட மறையாசிரியர்களுக்கான தவக்கால ஞான ஒடுக்கம்

இரத்தினப்புரி மறைமாவட்டத்தின் தமிழ் சிங்களம் இருமொழிகளிலும் மறையாசிரியர்களுக்கான தவக்கால ஞான ஒடுக்கம் (2015.03.07) அன்று இரத்தினப்புரி மறைமாவட்ட கத்தோலிக்க மறைப்பணி நிலையத்தில் நடைபெற்றது. ஏறக்குறைய இருமொழிகளிலும் எண்பதுக்கும் மேற்பட்ட மறையாசிரியர்கள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வினை மறைமாவட்ட மறைப்பணி நிலைய பணிப்பாளர் அருட்பணி நிரோசன் வாஸ் அடிகளார் ஏற்பாடு செய்திருந்தார்.

இதனை நெறிப்படுத்துவதற்காக இரத்தினப்புரி மறைமாவட்ட ஆயரின் செயலாளரான அருட்பணி. என்டன் மொரிஸ் அடிகளார் அழைக்கப்பட்டிருந்தார்.

விசேடமாக இந்த தவக்காலத்திலே இறைவார்த்தையை விசுவசித்து இறைவனோடு ஒன்றிக்கவும், செபிக்கவும், ஒருத்தல் முயற்சிகளில் ஈடுபடவும் மேலும் மேலும் இறைவிசுவாசத்தில் ஆழப்படுத்துவதற்காக மறையாசிரியர்கள் என்ற ரீதியில் பெற்றோர்களுடன் அதிகமாக தொடர்பு கொண்டு தம் பணியை புனித பணியாக்கிக் கொள்ளும்படியும், ஆதித் திருச்சபையில் புதிதாக ஞானஸ்நானம் பெறுபவர்களை நாற்பது நாட்கள் ஆயத்தப்படுத்தியதாக சரித்திரம் கூறுகிறது. அதுபோல் நாம் விசுவாசத்தில் வளர ஆயத்தப்படுத்துவோம் என்று கூறினார். அடிகளார் இருமொழிகளிலுமே உரை நிகழத்தியது பாராட்டக் கூடியதொன்றாகும். அவருக்கு எமது நன்றிகளும் செபங்களும்.



## ஞானத்தை வளர்க்கும் ஞான ஒடுக்கம்

இரத்தினப்புரி மறைமாவட்ட இரத்தினப்புரி பங்கு மறைப்பள்ளி மாணவர்களுக்கான தவக்கால ஞானஒடுக்கம் ஒன்றினை பங்கு அருட்பணி இரஞ்சன்மால் மொறாயஸ், அருட்பணி விஜேந்திரன் அடிகளாரும் கடந்த 2015.03.15 அன்று இரத்தினப்புரி பேராலய மல்விஞ்ஞானோ மண்டத்தில் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

இந்த ஞானவொடுக்கத்தை நெறிப்படுத்து-வதற்காக கண்டி தேசிய குருமடத்தில் திருவழிபாட்டு ஆராதனைகள் விரிவுரையாளராக கடமை புரியும் அருட்பணி சூசைநாதன் (பு.ஆ.ச) அடிகளார் விசேடமாக தமிழ் பேசும் மாணவ மாணவியர்களுக்காக அழைக்க-ப்பட்டிருந்தார்.

அடிகளாரின் ஆரம்ப செபத்துடன் கடவுள் எம்மை அன்பு செய்வதால் எம் ஒவ்வொருவரையும் திருமுழுக்கு மூலம் விசேடமாக அழைத்து, தம்முடன் ஒப்பந்தம் செய்துள்ளார். இதனால் நாம் நல்லவர்களாக வாழ வேண்டும். இறைவனின் கட்டளைகளை கடைப்பிடிக்க வேண்டும். பிறருக்கு அன்பு செய்ய வேண்டும். விசேடமாக இந்த தவக்காலத்திலே ஒருத்தல் முயற்சிகளிலும் - பக்தி முயற்சிகளிலும், செபத்தில் ஈடுபடுதல் அவசியமென கூறி பாடல்களோடு மிக உருக்கமாக செபிப்பதில் மாணவர்களை பக்தியில் ஈடுபடுத்திய அடிகளார் செபிப்பதையும், பங்குகொண்ட மாணவர்கள் ஒரு பகுதியினர் அடிகளார் உரை நிகழ்த்துவதை பயபக்தியுடன் உற்று நோக்கி செவிமடுப்பதையும் காணக்கூடியதாக இருந்தது.



அருட்தந்தை விசேடமாக தமது உரையிலே புனிதவார நிகழ்வுகளான குருத்தோலை ஞாயிறு, புனித வியாழன், புனித வெள்ளி, அல்லேலூயா சனி, பாஸ்கா ஞாயிறு என்பவற்றை எடுத்துரைத்ததை கேட்டுக்கொண்டிருந்த சில மாணவர்களின் பெற்றோர்களும் புனித நிகழ்வுகள் பற்றிய தெளிவு பெற்றதாகக் கூறியது குறிப்பிடத்தக்கதாகும்.

**தகவல்**

**மேரி இருதயநாதன் (மறையாசிரியர்)**

**பேராலயம், இரத்தினப்புரி**



# மகதலா மரியா

## இயேசுவின் உயிர்ப்பை முதலில் கண்டவர்.

அன்பைப் பற்றி புனித அகுஸ்தீனார் இவ்வாறு கூறுகின்றார். “அன்பு செய், பின்பு எல்லாம் செய்” மகதலா மரியா இயேசுவின் மீது கொண்ட அன்பிற்காகச் செய்யும் காரியங்கள்.

இயேசு சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும்போது மகதலா மரியா அருகில் இருந்து அவருக்கு ஆறுதல் தருகிறார். (யோவா 19:25)

இயேசு அடக்கம் செய்யப்படும் இடத்தில் மகதலா மரியாவின் பெயர் குறிப்பிடப்படுகின்றது. (மாற்கு 15:47)

இயேசுவின் உடலுக்கு நறுமணத் தைலம் பூச அவருடைய கல்லறைக்கு சென்று மகதலா மரியா இயேசுவை வெகுவாக நேசித்தார். அதனால் தான் தம் உயிர்ப்புச் செய்தியை அறிவிக்கும் முதல் நபராக இயேசு அவரைத் தெரிந்தெடுத்தார். (யோவா 20:16)

மகதலா மரியா தொடக்க காலத்தில் ஒரு பாவியாக இருந்து பின்னர் மனம் மாறினார். பேராயர் புல்டன் ஷீன் தன் Life of Christ என்ற புத்தகத்தில் இப்படிச் சொல்கிறார்.

“The birth of jesus was first annownced to virgin woman. The resurrection of jesus was first annownced to fallen wonan"

இயேசுவின் பிறப்பு ஒரு கன்னிப் பெண்ணுக்கும் இயேசுவின் இறப்பு ஒரு பாவிப் பெண்ணுக்கும், முதலில் அறிவிக்கப்பட்டது. நல்லவர் / கெட்டவர் என்பதை தாண்டி அன்பு முதலிடம் வகிக்கின்றது. யார் மிகுந்த அன்பு செய்கிறார்களோ? அவர்களுக்கு இயேசு தம்மை வெளிப்படுத்துகிறார்.

இயேசுவின் காலடிகளைக் கழுவி கூந்தலால் துடைத்து, இலாமிச்சை நறுமணத் தைலம் பூசி, நங்கை இவர் இயேசுவின் இறப்பு அடக்கத்தை குறித்துக் காட்டும் நறுமணத்தைலத்தை பூசினாள். இயேசுவின் இதயத்தில் ஆழமாக இடம்பெற்றாள்.

உயிர்த்த கிறிஸ்துவை தோட்டக்காரன் உருவில் கண்டாள். அவர் இயேசு என்று அறிந்த பின் இயேசுவைப் பற்றிக் கொள்கின்றாள். இயேசு அவளிடம் என்னை இப்படிப் பற்றிக் கொள்ளதே என்று கூறுகின்றார். ஆனாலும் இயேசுவை இதயத்தில் புதைத்து வைத்து ஏந்தியவளாக திகழ்கிறாள். பாசத்துக்கும் தோழமைக்கும் மரிய மதலோனாள் பேறுபெற்றவளே

**இயேசுவின் அன்பைப் பெற்ற மகதலா மரியாவும் பாக்கியம் பெற்றவளே**



# நம்பிக்கையின் உச்சநிலை

அறிவைப் பெற பல வழிகள் உள்ளன. புலன்கள் வழியாக நாம் பெறும் அறிவு அடிப்படையானதாகும். அவை நம்முடைய கதவுகளாக அமைந்துள்ளன. இரண்டாவதாக நாம் பல செய்திகளை வாசித்து அறிந்து கொள்கின்றோம். அறிவைப் பெறுவதிலே நம்முடைய மூளை முக்கிய பங்காற்றுகிறது. மூன்றாவது நாம் நம்முடைய அனுபவத்தின் வாயிலாகவும், அறிவைப் பெறுகின்றோம். அனுபவம் தரும் அறிவு மற்ற வகைகளில் பெறும் அறிவைக் காட்டிலும் ஆழமானதாகும். இறுதியாக அறிவைப் பெறும் வழிகளில் முன்னிடம் பெறுவது உள்ளொளி ஆகும். நம்முடைய உள்ளத்தில் நம்முடைய முயற்சியினால் அல்லாமல் திடீரென உதயமாகும் எண்ணங்களே உள்ளொளி என்று அழைக்கப்படுகின்றது.

இதனால் நாம் பெறும் அறிவானது ஆழமானதாக வேரோட்டமுள்ளதாக, உயிரோட்டம் நிறைந்ததாக அமைகிறது. மனித வாழ்வுக்கும் அறிவுக்கும் அப்பாற்பட்ட பல விசயங்களை இவ்வாறு நாம், நம் உள்ளத்தில் உணர்ந்து கொள்ள முடியும். இதுவே நம்பிக்கையின் அடித்தளமாக அமைகிறது. இறை நம்பிக்கையின் விசுவாசத்தின் ஊற்றாகவும் அமைவது இந்த உள்ளொளியே.

புனித தோமாவுடைய நம்பிக்கையும் புலன் சார்ந்த நம்பிக்கை அல்ல, மாறாக உள்ளொளி சார்ந்த நம்பிக்கையாகும். உயிர்த்த இயேசு சீடர்களுக்குத் தோன்றிய போது அதை கண்ணால் காணும் பேற்றினை புனித தோமா பெறவில்லை. “ஆண்டவரைக் கண்டோம்” என்று மற்றச் சீடர்கள் மகிழ்ச்சியோடு கூறியபோது தோமா அவ்வாய்ப்பை நழுவவிட்டதைக் குறித்து மிகுந்த வருத்தமடைந்தார். அவர்கள் கண்களால் கண்டு பெற்ற அறிவை அவற்றிலிருந்து உண்டான நம்பிக்கையைத் தானும் பெறவேண்டும் என விழைந்தார். எனவே அவர் ஒருபடி மேலே போய் “அவருடைய கைகளில் ஆணிகளால் ஏற்பட்ட தழும்பைப் பார்த்து அதில் என் விரலைவிட்டு, அவர் விலாவில் என் கையை இட்டாலன்றி நான் நம்பமாட்டேன்” என்று கூறுகின்றார். கண்களால் காண்பதோடு மட்டுமல்லாமல், கைகளால் தொட்டும் உணரவேண்டும் என்று விரும்புகிறார்.

தோமாவுக்கு அவர் விரும்பிய புலன் அனுபவத்தை இயேசு வழங்குகின்றார். ஆனால் தோமா விரும்பியது நிறைவேறியவுடன் தான் செய்ய விரும்பியதைச் செய்யவில்லை. அவர் நம்பிக்கையின் முதன்மையான நிலைக்கு கடந்து செல்கிறார்.

“நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள்” என்று தம் நம்பிக்கையை உயிரோட்டத்துடன் எடுத்தியம்புகிறார். எனவே நம்பிக்கைத் தான் மனித வாழ்க்கையின் ஆதாரமாகவும், அடிப்படையாகவும், உந்து சக்தியாகவும் விளங்குகின்றது. நம்பிக்கை இல்லாத வாழ்க்கை பாலைவனமாயும், நரகமாகவும் மாறிவிடுகின்றது. நம்பிக்கைத் தான் மனித வாழ்க்கைக்கு பொருள் கொடுக்கிறது. மனித வாழ்க்கையையும் மலர்ச்சியையும் கொடுக்கிறது.

இறைவன் மீது கொண்டிருகின்ற நம்பிக்கையே மனித வாழ்க்கையில் சந்திக்கின்ற ஐயங்கள் போராட்டங்களையும், சோதனைகளையும் எதிர்கொள்ள சக்தியையும், மனத் தெளிவையும் கொடுக்கிறது.

ஆகவே தோமா போல உயிர்த்த இயேசுவில் முழு நம்பிக்கை கொண்டு, “நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள்” என்று நம்பிக்கையை முழு உள்ளத்தோடு ஏற்றுக்கொண்டு இயேசுவில் உயிர்ப்பு தரும் உன்னதமான புதுவாழ்வை பிறரோடு பகிர்ந்துகொள்வோம்.



# எங்களோடு தங்கும்

எங்களோடு தங்கும் ஏனெனில் மாலை நேரம் ஆயிற்று. பொழுது போயிற்று என்று சொல்லி ஒரு வழிப்போக்கருக்கு கிளேயோப்பாவும் அவர் தோழரும் உபசரிப்பு செய்கின்றார்கள்.

உபசரிப்பின் விளைவு உயிர்த்த இயேசுவைக் கண்டு கொள்கிறார்கள். வழிப்போக்கர் தானே என அவரை போக விட்டிருந்தால் எம்மாவு சீடர்களுக்கு அந்த மகத்தான அனுபவம் வாய்த்திருக்க முடியாது. ஒரு சிறிய உபசரிப்பில் ஆண்டவரை காணும் கதவு திறக்கப்பட்டது. உணவு பகிர்தலில் கடவுள் வல்லமையுள்ள முறையில் தம்மை வெளிப்படுத்துகிறார். எம்மாவு சீடர்கள் நிகழ்வு ஒரு தனித்துவமான நிகழ்வாக புனித லூக்கா காட்டுகிறார்.

இந்நிகழ்ச்சி நமக்கு மூன்று பாடங்களை தருகின்றது.

### 1. உதயத்தை நோக்கி

எம்மாவு சீடர்களின் பிரச்சினை என்னவென்றால், அவர்கள் இருவரும் சூரிய அஸ்தமனத்தை நோக்கி நடந்தார்கள் என்று விவிலிய வல்லுநர்கள் சொல்கிறார்கள். எப்படி அது? எம்மாவு எருசலேமுக்கு மேற்கு திசையில், ஏறக்குறைய 11 கிலோ மீட்டர் தூரத்தில் இருந்த ஒரு நகரம். ஆக, மாலை வேளையில் எருசலேமிலிருந்து, எம்மாவு நோக்கி நடந்த சீடர்கள் அஸ்தமனத்தை நோக்கிதானே நடந்திருக்க வேண்டும்? அது அவர்களின் நம்பிக்கையில்லாத மனநிலையை குறிப்பால் உணர்த்துகிறது. அதனால்தான், அவர்களால் இயேசுவை கண்டுணர முடியவில்லை. ஒரு கிறிஸ்தவன் எப்போதும் உதயத்தை நோக்கியே பயணப்பட வேண்டும். எண்ணிக்கை நூல் 21:11, இஸ்ரயேல் மக்களை கதிரவன் உதயம் நோக்கி பயணப்படும் மக்களாகக் காட்டுகிறது. அது கிறிஸ்தவனுக்கும் பொருந்தும். எந்தச் சூழ்நிலையிலும் கிறிஸ்தவர்கள் அவநம்பிக்கைக்கு இடம் கொடுக்கக்கூடாது. நம் பயணம் எப்போதும் எம்மாவுலிருந்து எருசலேம் நோக்கிய உதயம் சோக்கிய பயணமாக இருக்க வேண்டும்.

### 2. நம்பிக்கையின் நெருப்பு

எம்மாவு சீடர்களைப் பொறுத்த மட்டில், வாழ்க்கை தன் அர்த்தத்தை இழந்து விட்டது. அவர்கள் மனதில் குடியிருப்பது இப்போது வெறும் சூன்யம் மட்டுமே. அவர்கள் வழிப்போக்கர் உருவில் இருந்த இயேசுவிடம் சொல்லும் வார்த்தைகளைக் கவனியுங்கள். “அவர் இஸ்ரயேலை மீட்கப் போகின்றார் என்று நாங்கள் எதிர்பார்த்திருந்தோம்”. அப்படியென்றால் என்ன அர்த்தம்? இனி அதற்கு வாய்ப்பில்லை என்றுதானே? தங்கள் கனவு தோற்றுவிட்டது என்ற முடிவுக்கு உத்தரவாதமாக அவர்கள் வந்திருந்தார்கள். ஓர் இருள்மயமான மனநிலை.... மிச்சமிருக்கும் வாழ்க்கையை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்ற விரக்தி அவர்களின் வார்த்தைகளில் வெளிப்படுகிறது. அந்தச் சூழ்நிலையில் தான் இயேசு மறைநூலிலிருந்து பல மேற்கோள்கள் காட்டி, “இது முடிவல்ல, இனிதான் ஆட்டம் ஆரம்பம்” என்ற நம்பிக்கையை அவர்களுக்குள் விதைக்கிறார். எங்கே இருள் சுத்தமாகத் தங்களைக் கவ்விக்கொள்ளுமோ என்று அவர்கள் அஞ்சியபோது இயேசு வந்து ஒளியேற்றுகின்றார். நமநமத்துப் போயிருந்த அவர்கள் உள்ளத்தில் நம்பிக்கை நெருப்பு வைக்கிறார். அதனால்தான் 32வது வசனத்தில் அந்தச் சீடர்கள் தங்களுக்குள் இவ்வாறு பேசிக்கொள்கிறார்கள்... “வழியிலே அவர் நம்மோடு பேசி மறைநூலை விளக்கும் போது நம் உள்ளம் பற்றியெரியவில்லையா?” வில்லியம் ப்ளேக் என்ற பிரபல ஆங்கிலக் கவிஞர் பெந்தகோஸ்து நிகழ்ச்சி குறித்த ஒரு கவிதையில் இவ்வாறு சொல்வார்...

“உன் கண்கள் பற்றி எரியாவிட்டால், உன்னால் கடவுளைக் காண முடியாது. உன் காதுகள் பற்றி எரியாவிட்டால், உன்னால் கடவுளின் குரலைக் கேட்க முடியாது. உன் நாவு பற்றி எரியாவிட்டால், உன்னால் கடவுளின் பெயரைச் சொல்ல முடியாது. உன் இதயம் பற்றி எரியாவிட்டால், உன்னால் கடவுளை நேசிக்க முடியாது. உன் மனம் பற்றி எரியாவிட்டால், உன்னால் கடவுளை அறிய முடியாது”

இயேசு செய்தது அவர்கள் உள்ளத்தைப் பற்றி எரிய செய்ததே!

ஆங்கிலக் கதை ஒன்றில் ஒரு கதாப்பாத்திரம் இவ்வாறு சொல்லும்... “I never knew what life meant until i saw it L your eyes”. எனக்கு வாழ்க்கை என்றால் என்னவென்று தெரியாமல் இருந்தது. உன் கண்களில் அதன் அர்த்தத்தைப் பார்க்கும் வரை!

எம்மாவு சீடர்களுக்கும் அது பொருந்தும். அவர்களுக்கு வாழ்க்கை புரியவில்லை - இயேசுவின் கண்களில் மீண்டும் அதைப்....

தொடர்ச்சி 15ஆம் பக்கம்



# இறை இரக்கம்

இறை இரக்கம் என்றால் என்ன என்பதை முதலில் நாம் நோக்குவோமாயின் விண்ணுலகத் தந்தை மண்ணுலகிலுள்ளவர்கள் மீது எவ்வளவு இரக்கம் கொண்டுள்ளார் என்பதைக் காட்டிநிற்கின்றது. அதுபோலவே நாமும் இதயத்தில் இரக்கம் உள்ளவர்களாக, ஈரம் உள்ளவர்களாக வாழவேண்டும் என்றே இவ் இறை இரக்கம் என்னையும் உங்களையும் அழைத்து நிற்கின்றது.

இறை இரக்க பக்திக்கு முக்கியமானவராக விளங்கும் தூய பவுஸ்தீனாவின் குறிப்பேட்டில் இரக்கத்தின் முக்கியத்துவம் பற்றி ஆண்டவர் இயேசு பின்வருமாறு கூறுகின்றார். “அன்பு மகளே! உன் மூலமாக மக்கள் என் இரக்கத்தை உணரவேண்டும் என்பதை ஆசிக்கின்றேன். என்னுடைய இரக்கத்திலே நம்பிக்கை வைப்பதன் மூலம் நீ ஒரு தனித்துவமானவள் என்பதை இனங்கண்டு கொள்ள வேண்டும். என்மீது நீ கொண்டுள்ள அன்பினால் நீ இரக்கச் செயல்களில் ஈடுபடவேண்டும் என்று நான் உன்னிடம் வலிந்து கேட்கிறேன். உனக்கு அடுத்திருக்கும் சகோதர சகோதரிகள் மட்டில் எங்கும் என்றும் நீ இரக்கச் செயல்களைக் காட்டவேண்டும். நீ இவற்றிலிருந்து பின்வாங்கவோ, இவற்றைச் செய்யாது சாட்டுப் போக்குச் சொல்வது கூடாது”

இறையிரக்க திருவுருவப் படமானது ப்லேக் என்ற இடத்தில் புனித பவுஸ்தீனாவுக்கு கிடைக்கப்பெற்ற இறையிரக்க தரிசனத்திலிருந்து தோற்றம் பெற்றது. உயிர்ப்பு பெருவிழாவிற்கு அடுத்துவரும் ஞாயிறு இறை இரக்கத்தின் பெருவிழா கொண்டாடப்படுகின்றது. இறை இரக்கத்தின் நவநாள் செய்வது நல்லது. அது நம்மை இதயத்தில் இரக்கம் உள்ளவர்களாக வாழச் செய்யும். இவ்விரக்கம் ஆயிரம் பலிகளிலும் மேலானது. மொழி கடந்து இனம் கடந்து ஏன் நீதிமன்றங்களில் தராசுத் தீர்ப்புக்களைக் கூடக் கடந்து நின்று மனிதத்தை மட்டுமே பார்க்கும் வல்லமை கொண்டது. அநீதியாகத் துன்புறுவோருக்காக இரங்கும் சுயநலமற்ற, துணிவுள்ள இரக்கம் இன்று அதிகம் தேவைப்படுகின்றது. இதற்கு இறை இரக்கப் பெருவிழாவே வழிசமைக்கும் ஒன்றாக மாறவேண்டும்.

வல்லமைகளை விரும்புவதும் வியப்பதும் அவற்றிற்கு விருதுகள் வழங்குவதும் இவ்வுலகின் இயற்கைக் குணம். ஏழாவது அறிவை நோக்கி நகர தன்னைத் தயார் செய்கின்றது மானுட அறிவியல். இந்நிலையில் சுயநலம்... சுயநலம்... சுயநலம் என்று அதன்பின்னே ஓடிக்கொண்டிருக்கிறான் மானுடன். தன்னுடன் பிறந்த சகோதரனின் இறுதிச்சடங்கில் கலந்துகொள்வதற்குக்கூட நேரமில்லை. தனது அனுதாபங்களை ஓர் குறுஞ்செய்தியில் அனுப்பிவிடுகின்றான். இங்கே இரக்கம் என்ற பேச்சை எடுத்தால் “அது என்ன விலை?” என்ற பதிலே நமக்குக் கிடைக்கக் காத்திருக்கின்றது. இச்சூழ்நிலையில் நாம் இறை இரக்கம் பற்றிப் பேசுவதும் இறை இரக்கத்திற்கு விழா எடுப்பதுவும் அவசியமானதொன்றே.

இயேசு துன்புறும் மனுக்குலத்தின் துன்ப துயரங்களை தன்னிலே புதுப்பிக்கும் பொழுதுமட்டும் தான் உண்மையான இறை இரக்கம் ஏற்பட முடியும். யார் உண்மையில் இன்று மக்களின் துன்பங்களைத் தமது சொந்தத் துன்பங்களாகத் தம்மேல் சுமந்து கொள்கிறார்கள் என்பதை மக்கள் தான் சொல்லவேண்டும். எங்கள் துன்பங்கள், சுமைகளை யார் சுமப்பார்கள் என்று பார்த்துக் கொண்டு இருப்பதை விட, நாம் எவ்வளவுக்கு எமது பொறுப்பில் உள்ளவர்களுடைய துன்பங்கள் சுமைகளை நல்ல தந்தையாக, நல்ல தாயாக, நல்ல ஆசிரியராக, நல்ல பணியாளர்களாக நின்று சுமக்கின்றோம் என்று சிந்திப்போம்.

தமது காயங்களாலும், மரணத்தினாலும் மானுடத்தின் காயங்கள் குணப்படுத்தப்பட்டு மனிதர்கள் வாழ்வு பெறவேண்டும் என்று வாழ்ந்து காட்டியவர் தான் இறைமகன் இயேசு. இயேசு மனுக்குலத்தின் துன்பங்கள், துயரங்கள், காயங்கள் அனைத்தையும் தன்மேல் சுமந்து கொண்டவர். பாவமற்றவராய் மனுவுருவாகிய இறைவன் இயேசு ஒருவர் தான் மனுக்குலத்தின் மீது உண்மையான பரிவு இரக்கம் கொள்ள முடியும். மனிதம் ஓர் உன்னத நிலைக்கு வருவதற்கு நாம் ஒவ்வொருவரும் எமக்குள்ளிருக்கும் வக்கிரகங்களை போலிகள், வீண்கவலைகள், நோவுகள், தவிப்புக்கள், வெறுப்புக்கள், பழிவாங்கல்கள், பாலியல், பற்றுகள், குடிபோதைப் பிடிப்புகள் என்பவற்றை அழிக்க வேண்டும். இவ்வாறு அழித்தால் தான் ஆண்டவர் இயேசு தனது சிலுவை மரண நேரத்தில் செய்ததுபோல, தந்தைக்கு எமது உள்ளார்ந்த பதிலைக் கொடுக்க முடியும்.

ஆண்டவர் இயேசுவின் இரக்கத்தை நாம் அவர் சிலுவையில் இருந்து கூறிய உள்ளார்ந்த பதில் மூலம் அறிந்து கொள்ள முடியும். “தந்தையே இவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை”. இறைமகன் இயேசு மனித உருத்தரித்த போது முக்காலங்களையும் சேர்ந்த மானிடத்தின் காயங்களைத் தமது சொந்தக் காயங்களாக ஏற்றுக்கொண்டார். ஆக, நிகழ்காலத்தில் மானிடரின் காயங்கள் இறைமகன் இயேசுவின் அவதாரத்தில் ஒன்றித்துள்ளன என்பதும் நமது விசுவாசத்தின் அடித்தளமாக அமைகின்றன.

ஆண்டவர் மனுக்குலத்தின் மீது பேரன்பும், பேரிரக்கமும் கொண்டவர். அவர் ஒருபோதும் தனது மக்கள் மீது இரக்கமற்றவராய் இருப்பதில்லை. இயற்கை அனர்த்தங்களாலும், மனிதனின் அநீதி அநியாயங்களாலும் குற்றமற்றவர்கள் இருக்கின்றனர் என்பதை மறுக்கமுடியாது. ஆனால் அவை கடவுளின் தண்டனை அல்ல. மனிதர் இயற்கைக்கு எதிராகச் செய்யும் செயல்களின் விளைவால் குற்றமுள்ளவர்களும், குற்றமற்றவர்களும் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறு தன்னுடைய செயலினாலே நடைபெறுபவை கடவுளுடைய தண்டனைகள் அல்ல. மாறாக, இயற்கைக்கு எதிராக மனிதன் செய்யும் செயல்களின் விளைவே. கூரிய ஆயுதத்தை நான் காலால் உதைக்கும் பொழுது எனக்கு ஏற்படுகின்ற காயம் என்னுடைய செயலின் விளைவேயன்றி கடவுளின் தண்டனையல்ல. ஆண்டவர் பேரன்பு கூருவதில் விருப்பமுள்ளவர் எவரின் இறப்பிலும் அவர் இன்பம் காண்பதில்லை.

**“உங்கள் வானகத் தந்தை இரக்கம் உள்ளவராய் இருப்பதுபோல் நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள்” என்ற வசனத்தை நாமும் நமது வாழ்வாக்குவோம்.**

சிந்துஜா றெக்ஸ் நியூட்டன், இளவாலை, யாழ்ப்பாணம்.



குலோடியா, தரம் 4.



அ. மதுமிதா, தரம் 9,
கொ / நல்லாயன் மகளிர் மகா வித்தியாலயம்





மகாஷா, 146, ஜிந்துப்பிட்டி, கொழும்பு – 13




# புனித இருபத்தி மூன்றாம் ஜோன்




## வாழ்வு ஒரு அழைப்பு

வாழ்த்துக்களால் வசப்படும் வாழ்வு ஒரு அழைப்பு. அழைப்பவர் கடவுள். அழைப்பவர் குரலுக்குச் செவிகொடுப்பவர் மனிதர். உலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதரையும் கடவுள் வெவ்வேறு பணிக்காக அழைக்கின்றார். திருமுழுக்கின் வழியாக திருச்சபையின் அங்கத்தினராகச் செயல்படும் ஒவ்வொருவரும் பொதுக்குருத்துவத்தில் பங்கேற்கிறோம்.

பணிக்குருத்துவத்தில் பங்கேற்பவர்கள் ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார். பணிக்குருத்துவத்திற்கான அழைப்பினை ஒவ்வொருவரும் வெவ்வேறு நிலைகளில் பெறுவதுண்டு. உதாரணமாக, தமது 26 வயதில் பிரெஞ்சு நாட்டவரிடமிருந்து கோட்டையைக் காப்பாற்ற நடந்த போரில் வீரத்துடன் போரிட்டவர்தான் இனிகோ. போரில் எதிரியின் பீரங்கிக் குண்டு காலில் பாய்ந்து கால் எலும்பு முறிந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அப்போது கரங்களில் தவழ்ந்த "இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு" மற்றும் "புனிதர்களின் வாழ்க்கை வரலாறு" நூல்கள் தான் ஊனியல் இச்சைக்கு ஆட்பட்ட இனிகோவைத் தூய இஞ்ஞாசிரியராக மாற்றியது.

நிகழ்வுகள், சூழல்கள், மாமனிதர்கள், ஆன்மீக அனுபவங்கள், தோற்றங்கள் எனப் பல காரணிகள் ஒருவரை அழைத்தல் வாழ்விற்கு அர்ப்பணமாக்கும் காரணியாக அமையும். இவற்றுள் எது ஆஞ்சலோவைக் குருத்துவ அழைத்தலுக்கு உந்துத்தள்ளியது என்பதைத் தெளிவாகச் சொல்ல முடியாது. இருப்பினும் ஆஞ்சலோவின் இறைபக்தியின் இருப்பிடமாக அமைந்தது அவரது இல்லமும் அவர் பெற்றோரின் உள்ளமும் என்றால் மிகையாகாது.

### இணைந்து செபமாலை செபிக்கும் பழக்கம்

"செபமாலை சொல்லும் படையணி ஒன்றை எனக்குக் கொடுங்கள், இந்த உலகத்தையே வெல்வேன்" என்பார் 9ம் பத்திநாதர். உலகை வெல்லும் மாமருந்தான செபமாலைப் பக்தி ஆஞ்சலோவின் இல்லத்தில் ஆழமாக வேரூன்றி இருந்தது. ஒவ்வொரு நாளும் இரவு வேளையில் தூங்கச் செல்வதற்கு முன் குடும்ப உறுப்பினர்கள் எல்லோரும் இணைந்து செபமாலைச் செபிக்கும் பழக்கம் கொண்டிருந்தார்கள்.

### விவிலியம் வாசிக்கும் பழக்கம்

"கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது. ஆற்றல் வாய்ந்தது. இருபக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினும் கூர்மையானது. ஆன்மாவையும் ஆவியையும் பிரிக்கும் அளவுக்குக் குத்தி ஊடுருவுகிறது. எலும்பு மூட்டையும் மச்சையையும் அவ்வாறே ஊடுருவுகிறது. உள்ளத்தின் சிந்தனைகளையும் நோக்கங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது" (எபி 4:12) அத்தகு வலிமை வாய்ந்த இறைவார்த்தையின் சிலப் பகுதிகளைத் தினமும் ஆஞ்சலோவின் ஞானத் தந்தை சாவியோ வாசிக்க அனைவரும் அமைதியாகக் கேட்கும் வழக்கம் இருந்தது.

### அன்றாடத் திருப்பலியில் பங்கேற்பது

திருப்பலி நமது வழிபாட்டின் உச்சம். தூய பவுலடியார் சொல்வது போன்று, "கடவுளுக்கு உகந்த, தூய உயிருள்ள பலியாக உங்களைப் படையுங்கள். இதுவே நீங்கள் செய்யும் உள்ளார்ந்த வழிபாடு" (உரோ 12:1) இதனைச் சிறுவயதிலே பிரதிபலிக்கும் விதமாய் ஒவ்வொரு நாளும் காலையில் ஆஞ்சலோ திருப்பலிக்குச் சென்று பங்கேற்றார். திருப்பலிக்கு உதவி செய்தார்.

### பெற்றோரின் முன்மாதிரி வாழ்வு

ஆஞ்சலோவின் பெற்றோர் குருக்கள் மீது தனிப்பட்ட அன்பும் மரியாதையும் கொண்டிருந்தனர். பக்தி நிறைந்த பெற்றோரின் வாழ்வும் இவரை நன்குத் தொட்டது.

### அங்கியின் பொத்தான் ஈர்த்தது.

திருத்தந்தையாக ஆஞ்சலோ அவர்கள் பணியாற்றிக் கொண்டிருந்த வேளையில் அலெக்ஸாண்டர் கிளேட்டன் என்னும் ஓவியர் ஆஞ்சலோ அவர்களின் படத்தை வரைந்தான். தான் வரைந்த படத்தில் ஏதாவது மாற்றம் செய்ய வேண்டுமா என்று கேட்டபோது, திருத்தந்தை 23ம் ஜோன் அப்படத்தைப் பார்த்துவிட்டு, தனது அங்கியிலுள்ள பொத்தான்கள் எடுப்பாகத் தோன்ற வேண்டும் என்று கூறினார்! ஓவியருக்கு விடயம் புரியவில்லை. உடனே திருத்தந்தை ஓவியரைப் பார்த்து, "நான் முதலில் குருவாக விரும்பியதற்கு அங்கியின் பொத்தான்களே காரணம். பீடச்சிறுவனாக நின்று திருப்பலிக்கு உதவி செய்யும் வேளையில் குருக்கள் அணிந்திருக்கும் அங்கியின் பொத்தான்களே என்னை அதிகம் ஈர்க்கும். ஒரு குருவைப் பார்த்ததும் முதலாவது எனது வேலை அவரது அங்கியில் எத்தனை பொத்தான்கள் உள்ளன என்று எண்ணுவதுதான்" என்றார்.

**தொடரும்...**

## கல்வி

- சோறு இல்லாதவருக்குச் சோறும், உடை இல்லாதவருக்கு உடையும், வீடு இல்லாதவருக்கு வீடும் கொடுக்கப்பட வேண்டியது எவ்வளவு அவசியமும் நியாயமும் ஆகுமோ, அது போல கல்வி இல்லாதவருக்குக் கல்வி கொடுப்பதும் அவசியமாகும்.
- வெறும் நூல்களிலிருந்து மட்டுமே அறியப்படுகின்றது கல்வி அல்ல, வாழ்வின் ஒவ்வொரு நொடியுமே கற்பதாக இருப்பதுதான் கல்வி.
- கல்வியின் வேர்கள் கசப்பானவை ஆனால் அவற்றின் கனிகள் இனிப்பானவை.
- பிறப்பால் உண்டாக்கப்பட்ட உயர்வு தாழ்வு கல்வியால் உடைகிறது.

## வாழும் புனிதர்



**கனிவான பார்வை**

**இனிமையான புன்னகை**

**ஆறுதலான தொடுகை**

**அரவணைக்கும் கரங்கள்**

**குழந்தைகள் மீது அன்பு**

**நோயாளர்கள் மீது பரிவு**

**முதியோர் மீது பாசம்**

**இளையோர் மீது நம்பிக்கை**

**ஏனைய மதங்களுடன் நட்புறவு**

இவை அனைத்திற்கும் சொந்தக்காரர் எமது **பரிசுத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களே.** அன்னை தெரேசாவுக்கு அடுத்ததாக வாழும் புனிதராக வாழ்ந்து கொண்டிருக்கின்றவர் எமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்.

# பீடப்பணியாளர்களே இது உங்களுக்காக!



## அவருக்காய் பணிபுரிய... 6






## திருவழிபாட்டு நிகழ்வுகளில் பீடப்பணியாளரின் செயல்முறைகள்

திருவழிபாட்டு நிகழ்வுகளில் பீடப்பணியாளர்களின் செயல்பாடுகள் மிகவும் நேர்த்தியாக இருப்பது மிகவும் அவசியம். அதனை முன்னிட்டு, ஒரு திருப்பலி மற்றும் ஆராதனையில் பீடப்பணியாளர்களின் செயல்பாடுகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைக் காண்போம்.

**மாதிரி திருப்பலி**

**தொடக்கச் சடங்கு :**

இறைமக்கள் திருவழிபாட்டு நிகழ்வு நடக்கும் இடத்தில் கூடியிருக்க குருவும் பணியாளரும் திருவுடைகள் அணிந்து பின்வருமாறு பீடம் நோக்கிச் செல்வார்கள்.

1. தூபத்தைப் பயன்படுத்தினால், புகையும் தூபக்கலம் ஏந்திய பணியாளர் ஒருவர்.
2. சூழ்நிலைக்கு ஏற்றவாறு, எரியும் மெழுகு திரியினை ஏந்திய பணியாளர்கள் இருவர், இவர்கள் நடுவில் தேவையானால் திருச்சிலுவை தாங்கிய ஒருவர்.
3. திருவழிபாட்டை வழிநடத்தும் திருப்பணியாளர்.

குரு பீடத்திற்கு முன்பாக வந்து வணக்கம் செய்யும் போது, பீடப்பணியாளர்கள் பீடத்திற்கு முன்பாக நின்று வணக்கம் செய்து, திரியினை பீடத்தின் மேல் வைத்து விட்டு பீடமுற்றத்தில் அவர்களுக்குரிய இடத்தில் (இடதுபுறம் மற்றும் வலதுபுறம்) சென்று நிற்பர். தூபமிடும் பீடப்பணியாளர் மட்டும் குருவின் முன்பாக வந்து தூபக் கலத்தைக் கொடுப்பர். குருவானவர் பீடத்தைச் சுற்றி தூபம் காட்டும் பொழுது ஒரு பீடப்பணியாளர் குருவானவருக்கு முன்பாகவும் மற்றொருவர் குருவானவருக்கு பின்பாகவும் செல்வர். குரு தூபம் காட்டி முடித்தபின்பு பீடப்பணியாளர் ஒருவர் தூபக் கலத்தைப் பெற்றுக் கொண்டு திருப்பண்ட அறைக்குள் சென்று விடுவர்.

(**குரு :** பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயராலே
**மக் :** ஆமென்.
**குரு :** நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அருளும் கடவுளின் அன்பும், பரிசுத்த ஆவியின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக.
மக் : உம்மோடும் இருப்பதாக)

**மன்னிப்பு வழிபாடு (தீர்த்தம் மந்திரித்தல்)**

(**குரு:** அன்புமிக்க சகோதரரே..... எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.
**மக் :** ஆமென்.)

பீடச்சிறுவர் உப்பை எடுத்து வந்து குருவிடம் கொடுப்பார். குரு உப்பை ஆசீர்வதித்த பிறகு பீடப்பணியாளர் சிறிது உப்பைத் தீர்த்தக் குவளையில் இட வேண்டும். பிறகு குரு தீர்த்தம் தெளிப்பதற்குத் தேவையான கலத்தினைத் தயார் செய்ய உதவி செய்ய வேண்டும்.

(**குரு :** எல்லாம் வல்ல இறைவா... கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.
**மக் :** ஆமென்)

குரு தீர்த்தம் தெளிக்கும்போது பீடப்பணியாளர் யாரேனும் ஒருவர் தீர்த்தக் கலத்தோடு குருவிற்கு முன்பாக செல்வர். மற்றொருவர் கை துடைக்கும் துணியை எடுத்துக் கொண்டு பீடத்தின் முன்பாக நிற்பர்.

**சபை மன்றாட்டு**

(**குரு :** செபிப்போமாக....

பராமரித்தாளும் எங்கள் தந்தையே..... உம் திருமகனாகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம். **மக் :** ஆமென்)

திருப்பணியாளர் அமரச் செல்லும் போது பீடப்பணியாளர் சென்று அவரது திரு உடைகளை நாற்காலிக்குப் பின்பாக எடுத்து விடுவர்.

**அருள்வாக்கு வழிபாடு**

**முதல் வாசகம்**

அனைவரும் அமைதியோடு பழைய ஏற்பாட்டின் இறைவாக்கினைக் கேட்க அமருவர். பீடப்பணியாளர் சென்று வாசகம் வாசிப்போருக்கு உதவி செய்ய வேண்டும்.

(**வாசகர் :** இது ஆண்டவரின் அருள் வாக்கு
**மக் :** இறைவா உமக்கு நன்றி)

**இரண்டாம் வாசகம்.**

அனைவரும் அமைதியோடு புதிய ஏற்பாட்டின் இறைவாக்கினைக் கேட்க அமருவர். பீடப்பணியாளர் சென்று வாசகம் வாசிப்போருக்கு உதவி செய்ய வேண்டும்.

(**வாசகர் :** இது ஆண்டவரின் அருள் வாக்கு
**மக் :** இறைவா உமக்கு நன்றி)

**அல்லேலூயா பாடல்**

தூபத்தைப் பயன்படுத்தினால் குரு துபத்தை நற்செய்தி நூலுக்கு இட பீடப்பணியாளர் உதவி செய்வர். வாசகநூல் பீடத்தின் மீது இருந்தால் திருப்பணியாளர் அதனை எடுத்துக் கொண்டு வாசக மேடைக்குச் செல்வர். பீடப்பணியாளர்கள் அவருக்கு முன்பாக தூபக் கலத்தையும் எரியும் மெழுகுவர்த்திகளையும் ஏந்திச் செல்லலாம்.

(**குரு :** ஆண்டவர் உங்களோடு இருப்பாராக
**மக் :** உம்மோடும் இருப்பாராக
**குரு :** புனித .... எழுதிய பரிசுத்த நற்செய்தியிலிருந்து வாசகம்
**மக் :** ஆண்டவரே உமக்கு மகிமை)

தூபப் பணியாளர் தூபக் கலத்தைத் திருப்பணியாளரிடம் கொடுக்க வாசக மேடையில் இருந்தவாறு திருப்பணியாளர் நற்செய்தி நூலுக்கு தூபம் இடுவார். பிறகு பணியாளர் தூபத்தைத் திருப்பணியாளரிடமிருந்து பெற்றுக் கொண்டு நற்செய்தி வாசகம் முடியும் வரை வாசக மேடையின் அருகில் நிற்பர்.

(**குரு :** இது கிறிஸ்துவின் நற்செய்தி
**மக் :** கிறிஸ்துவே உமக்குப் புகழ்)

மறையுரைக்கு முன்பாகத் தூபம் ஏந்திய பீடப்பணியாளர் திருப்பண்ட அறைக்கு செல்வர். பீடப்பணியாளர்கள் மறையுரைக்கு செவிமடுப்பது மிகவும் அவசியம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

ஒவ்வொரு மன்றாட்டையும் இறைவனிடம் அறிக்கையிட்ட பின்பு இறைவா உம்மை மன்றாடுகின்றோம் என்று வாசிப்போர் கூறிய பின் அனைவரும் சேர்ந்து ஆண்டவரே எங்களை மன்றாட்டைக் கேட்டருளும் என்று பதில் கூறுவர்.

(**குரு :** எங்கள் புகலிடமும் பலமுமாகிய இறைவா.......... உம்மைக் கெஞ்சி மன்றாடுகின்றோம். ஆமென்)

## பொது அறிவிப்பு

**பூமியைப் போன்ற புதிய கிரகம் கண்டுபிடிப்பு**

**கெப்ளர் – 10சி**

பூமியை விட 17 மடங்கு எடையும், இருமடங்கு அளவும், கொண்ட கடினப் பாறைகளால் ஆன புதிய வகை கிரகத்தை அறிவியலாளர்கள் சேவியர் டமஸ்கியூ மற்றும் டிமிதார் சசேல்வ கண்டுபிடித்துள்ளனர். வியப்பூட்டும் இந்த கண்டுபிடிப்பால் உலகத்தின் தோற்றம் குறித்த அறிவியலாளர்களின் கருத்தில் மாற்றம் ஏற்படும் என்று கூறப்படுகின்றது. மிகப்பெரிய பூமி என்று கூறப்படும் இந்த கிரகம் கெப்ளர் - 10 சி என்று பெயரிடப்பட்டுள்ளது. சூரியனைப் போன்று ஒரு விண்மீனை 45 நாள்களுக்கு ஒருமுறை சுற்றி வருகின்றது. இந்த கிரகத்தில் உயிரினங்கள் இருப்பதற்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

## "ப" எழுத்தின் பெருமை

| | | |
|---|---|---|
| அனைவரையும் மகிழ்விக்கும் | "ப" | அன்பு |
| பெற்றோரை மகிழ்விக்கும் | "ப" | சிறப்பு |
| வாழ்க்கையில் உயர உதவும் | "ப" | பொறுப்பு |
| மனிதனை உருவாக்கும் | "ப" | பண்பு |
| வாழ்க்கையில் சிறந்த | "ப" | நட்பு |
| பிரிந்தவர் கூடினால் பிறக்கும் | "ப" | சந்திப்பு |
| வெண்மை குறைந்தால்தோன்றும் | "ப" | பழுப்பு |
| காவல் துறையினர் கைதிகளுக்கு அளிக்கும் | "ப" | காப்பு |
| மக்கள் தன்னைத்தானே காக்கும் | "ப" | தற்காப்பு |
| மனதுக்கு வருத்தம் தரும் | "ப" | இறப்பு |
| தூக்க மயக்கத்தில் இருந்து எழும்பும் | "ப" | விழிப்பு |
| வறுமையின் நிறத்தைக் குறிக்கும் | "ப" | சிகப்பு |
| பதவி வந்தால் வரும் | "ப" | பளபளப்பு |
| வருங்காலத்தில் வரும் | "ப" | சேமிப்பு |
| மனிதன் ஒதுக்க வேண்டிய | "ப" | வெறுப்பு |

## மனமே திருப்திக் கொள்



ஒரு பெற்றோருக்கு இரண்டு மகன்கள். ஒருவன் என்ன கொடுத்தாலும், கிடைத்தாலும் அது பற்றி குறைப்பட்டுக் கொள்வான். மற்றவனோ என்ன கிடைத்தாலும் அதில் நல்லதையே காண்பான். பெற்றோருக்கு இப்படி வித்தியாசமாகச் செயல்படும் தங்கள் இரு மகன்களைப் பற்றியே சிந்தனை இருந்தது. ஒரு சமயம் ஒரு விழாவினைக் கொண்டாடும் பொழுது அந்த இருவருக்கும் ஒவ்வொரு பரிசினை வழங்கினார்கள். எதிலும் குறைபட்டுக் கொள்பவனுக்கு ஓர் அழகிய கடிகாரமும், அடுத்த மகனுக்கு ஒரு பொட்டலத்தில் குதிரைச் சாணத்தையும் வைத்துக் கொடுத்தார்கள். கடிகாரம் இருந்த பெட்டியைத் திறந்த மகன் அதைக் கண்டும் இந்த மொடல் தான் கிடைத்ததா? என்று குறைப்பட்டுக் கொண்டான். சாணமிருந்த பொட்டலத்தை திறந்த அடுத்த மகன் அங்குமிங்கும் எதையோ தேடினான். அவனது பெற்றோர்கள் "என்ன தேடுகிறாய்" என்று கேட்டார்கள். அவனோ "குதிரை சாணத்தை தந்துள்ளீர்களே, இந்த சாணத்தைப் போட்ட அந்த அழகிய குதிரையைத் தேடுகின்றேன்" என்று கூறினார். மன திருப்தி கொள்ளும் இளைய மகன்.



# இனிமையான இல்வாழ்விற்கு...!

7

**சென்றவாரத் தொடர்ச்சி...**

**மணவாழ்வை மண்ணில் குழிதோண்டிப் புதைக்கும் காரணிகள்**

## குடிபோதைப் பேய்

குடும்பத்தை நாசமாக்கும் கொடூரப் பேய்களுள் ஒன்று குடிப்பழக்கம். "குடி குடியைக் கெடுக்கும்" என்று அறிந்தும் குடித்துக் குடித்துக் குடியைக் கெடுத்து, குடல் வெடித்துச் சாகின்றவர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது.

என் உறவினர்களுள் பலர் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி, எப்போதும் போதையிலேயே இருந்த நிலையில், இன்று நல்ல வேலையைத் தொலைத்துவிட்டு, மகளின் திருமணமும் நடைபெறாமல் நிர்க்கதியான நிலை.

ஒரு முறை விருந்தில் கலந்துகொண்ட பெர்னாட் ஷா முன் ஓர் அழகிய பெண் மது கோப்பையை நீட்டி, "அருந்துங்கள்" என்றார். பெர்னாட் ஷா, "நான் மது அருந்துவதில்லை" என்றார். அப்பெண், "ஏன் நீங்கள் மது அருந்துவதில்லை" என்று கேட்டதற்கு, "என் முன்னோர்கள் என் பங்கிற்கும் சேர்த்து மது அருந்திவிட்டார்கள்" என்று பதிலளித்தார்.

ஒரு முறை மறைக்கல்வி வகுப்பில் ஒப்புரவு அருட்சாதனத்தைப் பற்றி வகுப்பு நடத்திக் கொண்டிருந்த போது ஒரு சிறுமி அழ ஆரம்பித்தாள். நான் காரணம் கேட்டேன். "என் அப்பா தினமும் குடித்துவிட்டு என்னையும் என் அம்மாவையும் போட்டு அடிக்கிறாரு. பூசைக்கு வர்ரதே இல்லை. என் அப்பாவுக்கும் சேர்த்து நான் பாவசங்கீர்த்தனம் செய்யலாமா பிரதர்" என்று கேட்ட போது என் கண்கள் குளமாயின.

இக்குடிகாரக் குடும்பத் தலைவர்களால் குடும்பத்தில் நிகழும் கொடிய பாதகங்களைச் சொல்லி அழுவது மட்டுமல்ல, இப்படிப்பட்டவர்களை நினைத்து அழுவதற்குக் கண்ணீரும் போதாது கடல் நீரும் போதாது.




குடும்பத் தலைவர்கள் குடிப்பது குற்றமே என்றாலும் அவர்கள் குடிப்பதற்கு மனைவியும் ஒரு காரணமாக அமையலாம் என்பதை மறுப்பதற்கில்லை. குடிகாரக் கணவனை நல்வழிப்படுத்துவது மனைவி கையில் இருக்கிறது என்பதை இங்கு சுட்டிக்காட்டுதல் அவசியமாகிறது. குடிகாரப் பேய்களை உருக்கமா செபத்தால் உருக்குலையச் செய்வோம்.

## இதரப் பேய்கள்

தன்னலம், சந்தேகம், பிடிவாதம், பழிவாங்கும் குணம், குடிப்பழக்கம் போன்ற பெரிய பேய்களின் இசைக் கச்சேரிக்கு வாத்தய போஷ்டியாகச் சில சில்லரைப் பேய்களும் உள்ளன. அவற்றுள் சில, மாமியார் கொடுமை, உறவினர்களின் தேவையற்ற தலையீடு, பொருளாதார கஷ்டம், குடும்பத்தை மறந்துவிட்டுத் தொழிலில் மூழ்கிவிடுதல், குழந்தைகளைப் பெறுவதிலும் வளர்ப்பதிலும் மாறுபட்ட கருத்து, பாலுறவில் அளவுக்கு அதிகமான நாட்டம் முதலியன.

இந்த வாழ்வு இறைவனால் கொடுக்கப்பட்ட மாபெரும் கொடை, ஒவ்வொரு வருடமும், மாதமும், நாளும், மணியும், வினாடியும் கூட அவர் நமக்கு வழங்கும் விலையேறப்பெற்ற பரிசு. உலகில் ஒரு முறை வாழும் இந்த வாழ்க்கையைச் சுமையாக அல்ல, சுகமாக வாழ்வோம். அதற்குத் தடையாக உள்ள அனைத்துப் பேய்களையும் அடித்து ஓட்டவல்ல ஒரே சக்தி அன்புதான். கிறிஸ்தவ மதம் அழுத்தமாக அறிவுறுத்துவதும் இந்த அன்பைத்தான். "அன்பால் அகிலத்தை ஆளலாம்" என்று ஆணித்தரமாகக் கூறுகின்றது. "எங்கே அன்பு உண்டோ அங்கே சுமை இல்லை. அப்படியே சுமை இருந்தாலும் அன்பு அச்சுமையை சுவையாக்கிவிடுகிறது" என்றார் புனித அகுஸ்தீனார். அன்பு இருந்தால் எச்சிலும் அமுதமாகிவிடும். அன்பு இல்லையெனில் அமுதமும் எச்சிலாகிவிடும்.

ஒரு வெயில் நாளில் இளநீர் இருந்த கடைக்குச் சென்றபோது காதலர்கள் ஓர் இளநீரை வாங்கி இருவரும் சுவைத்ததைக் கண்டு, "காதலியின் வாயில் ஊறிய எச்சில் காதலனுக்குப் பாலும் தேனும் சேர்ந்த இன்பக் கலவை" என்று பொய்யா மொழிப் புலவர் பாடியுள்ளது நினைவுக்கு வந்தது.

**பாலொடு தேன் கலந்தற்றே பனிமொழி**
**வாலெயிறு ஊறிய நீர் (குறள் 1121).**

அன்பில் தோயும் நெஞ்சங்கள் அனைத்துப் பிரச்சினைகளையும் மேற்கொள்ள முடியும் என்பதில் அணு அளவும் ஐயமில்லை. அத்தகைய அன்பு வாழ்க்கை வாழ வார்த்தை வாழ்வாக வேண்டும். பிள்ளைகள் தங்கள் பேச்சைக் கேட்பதில்லை என்று பெற்றோர் குறைபட்டுக் கொள்கின்றனர். தாங்கள் கடைப்பிடிக்காத ஒன்றைத் தம் பிள்ளைகள் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்பதற்குப் பெற்றோர்களுக்கு எந்த விதமான தார்மீக உரிமையுமில்லை.

ஒரு வீட்டிலே அப்பா தன் மகனைப் பார்த்து, "உன் வயதில் ஆபிரகாம் லிங்கன் எவ்வளவு கடினப்பட்டு உழைத்தார். நீ என்னடா ஊரைச் சுற்றி வர்ர" என்றார். அதற்கு அவன், "அப்பா, உங்க வயசிலே ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தார். நீங்கள் என்ன செய்கிறீர்கள்" என்று கேட்டான். அப்பா வாயடைத்துப் போய் நின்றார்.

**தொடரும்...**

## விவசாயத்திற்கான ஆதாரப்பூர்வமான பயிற்ச்சிப்பட்டறை ஒருங்கிணைப்பு

நோர்வே நாட்டின் பிரதிநிறுவனத்தின் கீழ் இயங்கிவரும் உலகளாவிய சமூக சேவை நிறுவனமாக இயங்கிக் கொண்டிருக்கும் "கரிடாஸ்" இயக்க சேவை நிறுவனத்தின் இவ்வருடத்தின் முதற் கட்ட அம்சமாக எமது நாட்டின் பிரதான தொழிலாக காணப்படும் விவசாயத்தை மையப் பொருளாக கொண்டு ஒரு பயிற்சிப்பாசறையொன்றை கடந்த மாசி மாதம் நாடாளாவிய ரீதியில் பல்வேறு இடங்களில் செயலமர்வுகளை நடாத்தி வந்தது.

அந்த வகையில் செயலமர்வின் முதல் கட்டமாக குருநாகல், அநுராதபுரம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் ஒரு குறுகிய காலவரையில் விவசாயம் சம்பந்தமாகவும், அதைப்பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டும் நிகழ்வாக இந்நிகழ்வு அமைந்திருந்தது. அநுராதபுர மாவட்டத்தில் இப்பயிற்சி பாசறைக்காக 45பேர் கலந்து கொண்டர். அதில் 7 குழுக்கள் சுய உதவி செய்யும் குழுக்களாகவும், (SHGs) யிலிருந்து மதவாச்சி நகரை பிரதிநிதிப்படுத்தும் ஒரு குழுவும், மற்றும் பொலன்னறுவை மாவட்டத்தில் அமாபஸ்கே பகுதியிலிருந்து 60 பேருக்கும் (CBO) குழு நிறுவனத்தின் கீழ் பயிற்சி பாசறை நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட "ராஜதுரை" நகரை பிரதிநிதிப்படுத்த 62 பேர் கலந்து கொண்டனர். இதில் முக்கியமாக விவசாய தொழில் செய்பவர்கள் மட்டுமல்லாமல் மீன்பிடி தொழில் செய்யும் மீனவர்களும் கலந்து சிறப்பித்தனர். மற்றும் இடைநேரத்தில் "நெடியமடு" நகரிலிருந்து 60 அங்கத்தவர்களும் பயிற்சி



பாசறையில் கலந்து கொண்டனர். குருநாகல் மாவட்டம் "பொதசோகம" கிரமாப் பகுதியிலிருந்து விவசாயத் தொழில் சார்பாக 35 ஆண்களும், 17 பெண்களும் மொத்தமாக 52 பேரும் மற்றும் "அம்பஸ்லேவ" "மாஹாவ" பகுதியின் யசோதரா பெண்கள் குழு சார்பாக 40 பெண்களும் கலந்து கொண்டனர். இறுதியாக இப்பயிற்சி பாசறையின் கருப்பொருளாக கலந்து ஆலோசிக்கப்பட்ட விடயங்களான விவசாயமானது "செய்முறை தொழில் நுனுக்கம் தயார் செய்யும் முகமாகவும்", "திரவரூபமான தயார் செய்யும் உர வகைகளாகவும் பயிர் வகைகளுக்கு நஷ்டமேற்படும் வெட்டுக்கிளி போன்ற பூச்சி வகைகள் தாக்கத்திலிருந்து விடுபடுமுகமாகவும், விவசாயத்துறையை பலப்படுத்துவதற்காக சிறு குழுக்களும், வீட்டில் பணியாற்றும் பணியாளர்களுக்கான குழுக்களுமாக தொழில் புரிய ஆலோசிக்கப்பட்டது.



கட்டுகஸ்த தொட்ட பங்கைச் சேர்ந்த போலகல தோட்டத்தில், அருள் திரு மைக்கல் சந்தானம் (OSB) அவர்களால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குழந்தை இயேசுவின் ஆலயத்தில் முதற் திருப்பலி கடந்த 22.02.2015 ஞாயிறு கார்மல் சபை அருட்தந்தை சில்வேஸ்டர் அடிகளாருடன் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. பங்கை சேர்ந்த அனேகமான கிறிஸ்தவர்களும், அருட்சகோதரர்களும், அருட்சகோதரிகளும் கலந்து சிறப்பித்தனர். ஆலயப் பொறுப்பாளர் திரு. பீட்டர் அவர்கள் நன்றி உரையில் நன்கொடை தாராளமாக உதவி எங்களுக்கு தோட்டத்தில் ஒரு ஆலயம் அமைத்து திருநாட் திருப்பலியில் கலந்து ஆதரவு காட்டிய அனைவருக்கும் நன்றியும், வாழ்த்தும் இறை ஆசீரையும் தெரிவித்துக் கொண்டார்.

**தகவல் மற்றும் படங்கள் : றொபட் டெனியல்**
**கட்டுகஸ் தொட்ட பங்கு**







கொழும்பு புதுச்செட்டித்தெரு புனித வியாகுல மாதா மறைப்பாடசாலை மறையாசிரியர் குழாமினால பங்குனி மாதம் 21ந் திகதி சனிக்கிழமை கல்வாரி திருயாத்திரை தியானம் நடைபெற்றது. இத்திருயாத்திரையில் குடும்ப ஆண்டினை முன்னிட்டு குடும்ப தியானமும் மாபிம புனித புனித சுவக்கின் ஆலயத்தில் அருட்தந்தை லூயிஸ் (கார்மேல் சபை) அடிகளாரால் வழிநடத்தப்பட்டது. இத்திருயாத்திரையில் குடும்பமாக இணைந்து பயன்பெற்ற குடும்பங்களையும், தியானத்தில் கலந்துகொண்ட மாணவர்களையும் படத்தில் காணலாம்.

**தகவல் : பீற்றர் றொபின்சன், புதுச்செட்டித்தெரு கொழும்பு – 13**

# அர்ப்பண வாழ்வின் ஆண்டு

Conference of Major Religious Superiors of Sri Lanka (CMRS)

Gospel Prophecy Hope

Consecrated Life in the Church today

## இலங்கையில் பணியாற்றும் துறவற சபைகள் 07

# மரியாளின் பிரான்சிஸ்கன் மறைத்தூதுவர் சபை

INSTITUTUM FRANCISCALIUM MISSIONARIARUM A MARIA

**இயேசுவைப்போல் மக்களைத் தேடிச் செல்ல வேண்டும் என்ற எமது அருங் கொடையின் கூற்றின்படியும் எல்லோருக்கும் எல்லாமாக இருந்து ஒரே மன நிலையோடு பணி புரிதல் வேண்டும். என்ற தூய பவுலின் கூற்றின்படியும் வாழ்கின்றோம்**

மரியாளின் பிரான்சிஸ்கன் மறைத்தூதுவர் சபையானது அர்ப்பணிக்கப்பட்ட கன்னியர்களைக் கொண்ட சர்வதேச சபையாகும். எங்களது அருங்கொடையானது ஐந்து அம்சங்களைக் கொண்டது.

1) ***அர்ப்பண வாழ்வு*** - இயேசுவைப் போல் எம்மையே முழுமையாக இறைவனின் திட்டத்திற்கு அர்ப்பணித்தல்
2) ***நற்கருணையே எம் வாழ்வின் மையம்.–*** தியாக வாழ்வு வாழ்ந்து புது உலகமைக்க அழைப்பு
3) ***மரியாளைப்போல்–*** மரியாளின் அர்ப்பணத்தை வாழ்வாக்குதல்
4) ***பணிவாழ்வு –*** அனைத்துலக பணிக்கென அர்ப்பணம் செய்தல்
5) ***புனித பிரான்சிஸ் அசீசியாரின்*** அடிச்சுவடுகளைப் பின்பற்றுதல்.

இந்த அம்சங்களை எமது சின்னம் தெளிவு படுத்துவதைக் காண்கின்றோம்.

எமது சபை ஸ்தாபகி ஹலன் டெ சப்புட்டின் (டெ'பாடன்) 1839 ஆம் ஆண்டு பிரான்சிஸ் நாட்டில் ஐந்தாவதும் கடைசி மகளாகவும் பிறந்தவர். இவர் தனது 21 வது வயதில் ஏழைகளின் கிளாறம்மாள் சபையில் சேர்ந்து பிரான்சிஸ் அசீசியாருடைய ஏழ்மையான வாழ்வைப் பற்றிய அனுபவங்களைப் பெற்றார். சுகயீனம் காரணமாக இவ்வாழ்வை தொடர முடியவில்லை. அவருடைய ஆன்மீக ஆலோசகரின் உதவியுடன் 1864 ஆம் ஆண்டு புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மாறி றெப்பராட்டிஸ் எனும் சபையில் தன்னை அர்ப்பணித்தார். அங்கு பாடுகளின் மரித்தாயார் எனும் பெயரைப் பெற்றார்.

1865 ஆம் ஆண்டு நவ சன்னியாச பயிற்சியில் இருக்கும் போது பாடுகளின் மரித்தாயார் மறைபரப்பாளராக இந்தியாவிற்கு அனுப்பப்பட்டார். சிறிது காலத்தின் பின் பெரிய பொறுப்புக்கள் கொடுக்கப்பட்டு அதை அவர் தூர நோக்குடன் திறம்பட செய்து முடித்தார். பல தடுக்க முடியாத காரணங்களினால் இவர் மாறி றெப்பராட்டிஸ் சபையிலிருந்து விலகினார். ஆனால் இயேசுவின் அன்பை உலகெங்கும் பரப்ப வேண்டும் என்ற ஆசை அவளை விட்டுப் போகவில்லை. இது இறைவனின் சித்தம் என்பதை அறிந்து கொண்டாள்.

பாப்பரசர் 9ஆம் பயசின் வழி நடத்தலையும் அறிவுரையையும் தேடி 1876 ஆம் ஆண்டின் முடிவில் உரோமிற்கு சென்றார். 1877 ஆம் ஆண்டு தை மாதம் 6ஆம் நாள் மூவிராசாக்களின் திருவிழா அன்று மரியாளின் மறைபரப்பு சபையானது பாப்பரசர் 9ஆம் பயஸ் அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த சபை 1882ஆம் ஆண்டு பிரான்சிஸ்கன் குடும்பத்தோடு இணைக்கப்பட்டது. எண்ணில் அடங்கா இளம் உள்ளங்கள் இச்சபையில் சேர்ந்தார்கள். பாடுகளின் மரித்தாயாரின் காலப் பகுதியிலேயே பல சர்வதேச குழுமங்கள் திறக்கப்பட்டு அவரின் தூர நோக்கை பின்பற்றி வாழ்ந்தார்கள். மரியாளின் பிரான்சிஸ்கன் மறைத்தூதுவர் சபை பல நாடுகளுக்கும் பொதுவான ஒரு சபை (சர்வதேச) என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று 79 தாய் மொழிகளைப் பேசும் அருட்சகோதரிகள் 75 நாடுகளிலும் 49 மானிலங்களிலும் 5 கண்டங்களிலும் வாழ்கின்றனர். உலகெங்கும் சென்று நற்செய்தியைப் பரப்ப நாம் தயாராக இருக்கின்றோம். இறைவனை அறியாத மக்கள் மத்தியில் விசேட விதமாக ஏழைகள் மத்தியில். (சட்ட நூல் பகுதி.4)

இந்து சமுத்திரத்தின் முத்து என விளங்கும் இலங்கை தீவின் பேராயரான அதி மேதகு. பொஞ்சீன் அடிகளாரின் அழைப்பை ஏற்று அருட்சகோதரிகள் இலங்கைக்கு வருகைதர எமது ஸ்தாபகி பாடுகளின் மரித்தாயாரே காரணமாக இருந்தார். 1886 ஆம் ஆண்டு நாங்கள் மொறட்டுவையில் ஆங்கிலப் பாடசாலையையும் அதன் பின் இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க கொழும்பிலுள்ள அரச வைத்தியசாலைக்கு தாதி மார்களான அருட்சகோ -தரிகள் அனுப்பிவைக்கப்பட்டார்கள். பின் பல பாடசாலைகள் (ஆங்கிலம் தமிழ் சிங்களம் ) பொது வைத்தியசாலையிலும், தொழுநோயாளர்கள் வைத்தியசாலையிலும், அநாதை மடங்களிலும், தையல் பயிற்சி நிலையங்களிலும் இறை அன்பிற்காகவே சேவை செய்தார்கள். இச் சேவை உலகம் முழுவதும் பரவியிருந்தது.

தொடக்கத்தில் எங்களது சேவைகள் அரச சார்பற்றதாக இருந்தாலும் இப்போது எமது நாட்டில் அரசியல், சமூக, சமய கலாச்சாரம் காரணங்களினால் இந்நிலை மாறியுள்ளது. மரியாளின் பிரான்சிஸ்கன் மறைத்தூதுவர் சபை அருட்சகோதரிகள் அரச வைத்தியசாலைகளில் வேலை செய்வதை நிறுத்தும் படி அரசாங்கம் கேட்டபோது நாங்கள் கொழும்பு, மன்னார் அரச வைத்திய சாலைகளிலும் ஹந்தளை, மான்தீவு தொழுநோயாளர்கள் வைத்தியசாலைகளிலும் பணியாற்றிக் கொண்டிருந்தோம். இதனால் 1964ஆம் ஆண்டு 120 அருட்சகோதரிகள் இலங்கையிலிருந்து வேறு நாடுகளிற்கு பணி புரிய அனுப்பப்பட்டார்கள்.

இன்று இலங்கையில் 9 மறைமாவட்டங்களில் 17 குழுமங்கள் உள்ளன. எங்கள் பணியின் வளர்ச்சி இறைவனின் திட்டத்தில் இருந்தபடியால் எங்களது ஸ்தாபனங்களில் பணிபுரிந்த அதிகமான அருட்சகோதரிகள் அதை விட்டு விலகி ஏழைகள், செல்வந்தர் ஒடுக்கப்பட்டோர் மத்தியில் பணிபுரிய துணிந்தனர். இயேசுவைப்போல் மக்களைத் தேடிச் செல்ல வேண்டும். என்னும் எமது அருங் கொடையின் கூற்றின்படியும் எல்லோருக்கும் எல்லாமாக இருந்து ஒரே மன நிலையோடு பணி புரிதல் வேண்டும். என்ற தூய பவுலின் கூற்றின்படியும் வாழ்கின்றோம். இலங்கையில் குழு வாழ்விலும் பணிவாழ்விலும் இதே மனநிலையோடும் வாழ்கின்றோம்.

## எமது பணிகள் சில:-

- பூரண பயிற்சி அளித்தல் எமது முக்கிய நோக்கமாகும். இதை நாம் சரியான முறைப்படி பாலர் பாடசாலையிலிருந்து தொடங்குகின்றோம். சாதி, மத, மொழி பேதமின்றி ஏழை சிறார்களுக்கு பாடசாலைகளை நடாத்தி வருகின்றோம்.
- தனியார், அரச தனியார் தேசிய பாடசாலைகளில் அரசாங்க ஆசிரியர்களாகவும் தொண்டர் ஆசிரியர்களாகவும் பணிபுரிதல்.
- வடக்கிலும் மேற்கிலும் வசதி குறைவான கிராமங்களில் வாழும் இளம் பெண்களுக்கு பூரண பயிற்சி நிலையம்.
- வசதி குறைவான மாணவிகளுக்கு பாடசாலை விடுதிகள்.
- இரண்டு தையல் நிலையங்களில் கைவேலைத் திட்டம்.
- தேயிலைப்பண்ணையில் எமது பணி.
- வடக்கில் அகதிகளாக தொழில், வசிப்பிடம் இழந்து சுய மரியாதை (கௌரவம்) இழந்தவர்களாக இருக்கும் மக்களுக்கு மீண்டும் அவைகளைப் பெற்றுக்கொடுக்க உதவுதல்.
- பாக்கிஸ்தானில் இருந்து புகழிடம் தேடி வருவோருடைய அவசியமான தேவைகளை நிவிர்த்திசெய்தல்.
- மன உள ஆலோசனை மனோதத்துவ ஆற்றுப்படுத்தல். (யுத்தத்தினால் பாதிக்கப்பட்டோர்)
- மீனவர்களுடனும் விவசாயிகளுடனும் எமது பணி.
- தொழுநோயாளர்களுக்கும, சிறைப்பட்டோருக்கும் எமது பணி.

எங்கள் பணித்தளங்களில், பங்குகளில் எங்கள் அருட்சகோதரிகள் இளையவர் தொடக்கம் வயதில் முதிர்ந்தவர்கள் வரை கல்வி, சமூக, மறைபரப்பு, மறைக்கல்வி பணிகளில் ஈடுபட்டுள்ளனர். அன்று போல் இன்றும் ஆர்வத்துடன் நற்செய்தி அறிவிப்பதிலும், துணிவுடன் சவால்களுக்கு முகம் கொடுப்பதிலும், நீதிக்காக போராடுவதின் மூலமும் எங்கள் அர்ப்பண வாழ்வு தெளிவாகின்றது. இது ஒரு முகம், ஒரு சொல், ஒரு ஒன்றுகூடல், ஒரு உரையாடல், ஓர் வரவு ஓர் அணைக்கும் கையாகிறது. அது போல் மனமாற்றமும் அர்ப்பணமும் அன்பளிப்பும் அபிசேகமும் தியானமும் ஆகின்றது. துன்புறுபவர்கள், அகதிகள், வெறுக்கப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர் மத்தியில் இயேசுவை பிரதிபலிப்பதற்காக இறைவன் எங்களை அனுப்புகின்றார்.

### புனிதர்களும் வேதசாட்சிகளும்.

நான்கு நாடுகளிலிருந்தும் வித்தியாசமான குடும்பப்பின்னணியிலிருந்து வரும் ஏழு இளம் பெண்கள் மரியாளின் பிரான்சிஸ்குவின் தூதுவர்கள் சபையில் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண்டனர். இவர்கள் 1899ஆம் ஆண்டு பங்குனி மாதம் 12ஆம் திகதி சீனாவிலுள்ள மார்சேலஸ் என்ற துறைமுகத்திற்குச் சென்றனர். சன்சி என்னும் பிரதேசத்தில் உள்ள தயுணபோ என்ற இடத்தை வைகாசி மாதம் 4ஆம் திகதி வந்தடைந்தனர். ஏழைகளுக்கும் நோய்வாய்ப்பட்டவர்களுக்கும் பணி செய்ய அவ்விடத்து கலாச்சாரத்திற்கும் காலநிலைக்கும் ஏற்ப தங்களை மாற்றிக் கொள்வதுடன் இன்னும் பல தியாகங்களை செய்வதற்கும் தயாராக இருந்தனர். அவர்களுடைய புதுக்குடும்பமாக இணைந்துகொண்ட மக்களை அன்பு செய்தும் இறுதி வரை அன்பு செய்யவும் துணிந்தனர். (யோவான்- 13:1) 1900 ஆம் ஆண்டு ஆடி மாதம் 9ஆம் திகதி இவர்கள் விசுவாசத்திற்கு சாட்சிபகரும் பொருட்டு சிரைச்சேதம் செய்யப்பட்டார்கள். 2000ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 1ஆம் திகதி சீன வேதசாட்சிகளுடன் இவர்கள் அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டார்கள்.

### அருளாளர் மரிய அசுந்தா

இத்தாலி நாட்டில் போஸ் என்ற இடத்தை பிறப்பிடமாகக் கொண்ட அருளாளர் மரிய அசுந்தா பலோட்டா 1878ஆம் ஆண்டு ஆவணி மாதம் 2ஆம் திகதி பிறந்தார். தனது 20வது வயதில் தனது சிறிய கிராமத்தை விட்டுச்சென்று ஒரு மரியாளின் பிரான்சிஸ்குவின் மறை தூதுவரானார். சில மாதங்கள் சீனாவில் பணியாற்றிய பின் 1905 ஆம் ஆண்டு தனது 27வது வயதில் சித்திரை மாதம் 7ஆம் திகதி சீனாவில் உயிர் நீர்த்தார். அருளாளர் அசுந்தா ஒரு குறுகியகாலத்தில் தியாகமும் சாட்சியமும் நிறைந்த வாழ்வு வாழ்ந்தார். அவர் உலகப் பார்வையில் உயர்வானதையும் விசேடமானதையும் செய்யவில்லை. ஆனால் அவள் ஒரு சாட்சிய வாழ்வு வாழ்ந்தார். 1954ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 7ஆம் திகதி அவர் அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

அருளாளர் பாடுகளின் மரித்தாயார்

**மரியாளின் பிரான்சிஸ்கன் மறைதூதுவர் சபை ஸ்தாபகி**

**அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டது 2002ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 20ஆம் திகதி.**

**சமூகத்தில் ஒரு மாற்றம் ஏற்படுவதே எங்கள் பணியின் நோக்கமும் அவாவும் ஆகும்.**

“இது எனது பணியாக இருந்தால் என்னோடு முடிந்து விடும். ஆனால் இது இறைவனின் பணி எனவே இது தொடரும்.”

( ஸ்தாபகி, அருளாளர் பாடுகளின் மரித்தாயார்,1903 )

## இறந்ததைக் களைந்து போடு

இயேசு நமக்காக சிலுவையில் அறையுண்ட போது நமது பாவங்களும் மரித்தன (கலா 2:20)

செத்துப்போன ஒரு பிணத்தைச் சுமந்து கொண்டு அலைய யாரும் விரும்புவதில்லை. முதலில் அதை அடக்கம் செய்து அப்புறப்படுத்துவார்கள்.

இயேசுவின் உயிர்ப்பிலே பங்கு கொண்டு வாழ பொறாமை, கோபம், சுயநலம், போன்ற மனித செயல்களை களைந்து போடு என்று புனித பவுல் அடிகளார் கூறுகிறார்.

- இறைவன் வைத்திருக்கும் மேலானவற்றையே நாடுங்கள்.
- நீங்கள் கிறிஸ்துவுக்குள்ளும், கிறிஸ்து உங்களுக்குள்ளும் இருக்கிறார் என்பதை மறவாதே.
- பழைய பாவ நிலைகளை விட்டுவிட்டு இறைவனின் வல்லமைக்காக செபியுங்கள்.

# திருத்தந்தையின் மறையுரைகளில் சில...

## எம் வாழ்க்கைக்கு



### மன்னிக்கத் தெரிந்தவர்களே மன்னிப்பை பெறுகின்றனர்

கடவுள் நம்மை மன்னிக்கிறார், அதேவேளை, நாமும் பிறரை மன்னிக்க வேண்டும் என நம்மிடமிருந்து எதிர்பார்க்கிறார் என்றார் திருத்தந்தை பிரான்சிஸ். தான் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லத்தின் சிற்றாலயத்தில் திருப்பலி நிறைவேற்றி மறையுரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இறைவனிடம் மன்னிப்பை வேண்டுபவர்கள், அவர் கற்பித்த "வானகத்திலுள்ள எங்கள் தந்தாய்" என்ற செபத்தின் படிப்பினைகளை பின்பற்றுபவர்களாக இருக்கவேண்டும் என்றார்.

இறைவன் அனைத்து வல்லமையும் உடையவராக இருந்தாலும், அவரின் வல்லமை, இதயத்தின் மூடிய கதவுகளுக்கு முன்னால் கைகட்டி நிற்கிறது, ஏனெனில் நமக்குத் தவறிழைத்தவர்களை நாம் மன்னிக்கவில்லையென்றால், இறைவனுக்கும் நம் இதயக் கதவுகள் மூடப்பட்டதாகவே இருக்கும் என்றார் திருத்தந்தை.

நான் தவறு செய்துவிட்டேன், மனம் வருந்துகிறேன் என்று கூறுவதும், நான் பாவமிழைத்துவிட்டேன், மன்னிப்பை வேண்டுகிறேன் என உரைப்பதும் வேறு வேறு என்பதை விளக்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், "எனக்குத் தவறிழைத்தவர்களை நான் மன்னிப்பதுபோல், இறைவா என்னை மன்னித்தருளும்" என நாம் செபிப்பது வாழ்வில் உண்மையாக கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்றார்.

நாம் பிறருக்கு வழங்கும் மன்னிப்பே நமக்கு இறைவனால் திருப்பி வழங்கப்படுகிறது, ஏனெனில், இறைமன்னிப்பிற்கு, நாம் பிறரை மன்னிப்பது ஒரு முன்நிபந்தனையாக உள்ளது என மேலும் கூறினார் திருத்தந்தை.

## கிறிஸ்துவைத் தேடுவோரைத் தடை செய்யாதீர்கள்

ஆலயம், அனைவரையும் வரவேற்கும் கருணையின் இல்லம், அது இயேசுவின் இல்லம் என்பதால் அதில் நுழையத் தேடும் மக்களுக்கு கிறிஸ்தவர்கள் கதவுகளை மூடும் இடமாக அது இருக்கக் கூடாது என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார்.

தம்மைத் தேடும் எவருக்கும், குறிப்பாக, தம்மைவிட்டுத் தொலைவில் இருப்பவர்க்கு இயேசு கதவுகளைத் திறந்து வைக்கிறார் என்று கடந்த காலத்தில் பலமுறை கூறியதையே சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் நிறைவேற்றிய திருப்பலியிலும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

"தம்மில் நம்பிக்கை வைப்பதாக அறிக்கையிட்டவர்கள், ஏன், சிலவேளைகளில் பிறருக்குக் கதவுகளை மூடி, தம்மீது நம்பிக்கை வைக்கத் தவறியவர்கள் என எல்லாருக்கும், கிறிஸ்து, தமது கருணையை முழுமையாக வழங்கும்வேளை, ஆலயத்தின் கதவுகளைத் தட்டுபவர்களுக்கு, சில கிறிஸ்தவர்கள் கதவுகளை அடைத்து விடுகின்றனர் என்று கவலையோடு கூறினார் திருத்தந்தை.

கோவிலின் வாயிற்படியிலிருந்து தண்ணீர் வருவது பற்றிக் கூறும், எசேக்கியேல் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய திருப்பலி முதல் வாசகத்தை(எசே.47,1-9,12) மையப்படுத்தி மறையுரை வழங்கிய திருத்தந்தை, தண்ணீர் குணமளிக்கும் தன்மை கொண்டது என்று சொல்லி தண்ணீர் பற்றிய சிந்தனைகளைப் பகிர்ந்து கொண்டார்.

வாழ்வில் பல தவறுகள் இழைத்து மனதளவில் நோயாய் இருப்பதாக உணரும் ஒரு மனிதர், ஒரு கட்டத்தில், தண்ணீர் அதாவது தூய ஆவி அவரில் செயல்பட்டு ஏதோ ஒரு சொல்லைக் கேட்டு ஆலயத்துக்குச் செல்லத் துணிந்து சென்றால் அங்கு ஆலயக் கதவுகள் மூடியிருப்பதைக் காண்கிறார் என்று கவலையுடன் கூறிய திருத்தந்தை, ஆலயம் இயேசுவின் வீடு, இயேசு எல்லாரையும் வரவேற்கிறார் என்றும் கூறினார். சட்டம் என்பது கடவுளையும், நம்மைப்போல் பிறரையும் அன்புகூர்வதாகும், எனவே நாம் ஒவ்வொருவரும், உலக திருச்சபையும் இயேசுவின் கருணைக்கு மனம் மாறுவதற்காக மன்றாடுவோம் என்று கூறினார்.

## செபத்தின் ஆசிரியர்

தன்னையே முழுமையாக கடவுளுக்கு அர்ப்பணித்த புனித அவிலா தெரேசாவின் வாழ்வு, இக்காலத்தில் அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வைப் புதுப்பிப்பதற்கு உதவுகின்ற மாபெரும் சொத்து என்று கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். பங்குனி 28, சனிக்கிழமையன்று அவிலா நகர் புனித தெரேசா அவர்கள் பிறந்ததன் 500ம் ஆண்டு நிறைவு சிறப்பிக்கப்பட்டதை முன்னிட்டு, காலணி அணியாத அனைத்துலக கார்மேல் சபை தலைவர் அருள்பணி Saverio Cannistrà அவர்களுக்கு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அனுப்பியுள்ள கடிதத்தில் இவ்வாறு கூறியுள்ளார்.

புனித அவிலா தெரேசா, முதலில் செபத்தின் ஆசிரியர் என்று விவரித்துள்ள திருத்தந்தை, புனித அவிலா தெரேசாவின் செபம், ஒரு காலத்துக்கு, ஒரு கட்டத்துக்கு மட்டும் ஏற்றது அல்ல, மாறாக, இச்செபம் பல்வேறு தருணங்களில் செபிக்கப்படுகின்றது, இப்புனிதர் இடைவிடாச் செபத்தில் அசையாத பற்றுறுதி கொண்டிருந்தார் என்று கூறியுள்ளார். ஆன்ம வறட்சி காலத்திலும், வாழ்வில் துன்பங்களை எதிர்கொள்ளும்போதும் நாம் செபத்தில் உறுதியாய் இருக்குமாறு அழைப்புவிடுக்கும் இப்புனிதர், உண்மையான குழுவாழ்வின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகிறார். அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு ஆண்டு கடைப்பிடிக்கப்படும் இவ்வாண்டில் இப்புனிதர் பிறந்ததன் 5ம் நூற்றாண்டு நிறைவு சிறப்பிக்கப்படுவது பொருத்தமாக உள்ளது, கடந்த காலத்தை நன்றியோடு திரும்பிப் பார்த்து சபைகளை ஆரம்பித்தவர்களின் உள்தூண்டுதல்களைக் கண்டுணருவதற்கு இந்நிகழ்வு நல்லதொரு காரணமாக உள்ளது என்று கூறியுள்ளார் திருத்தந்தை.



ஸ்பெயின் நாட்டின் அவிலாவில் 1515ம் ஆண்டு மார்ச் 28ம் தேதி பிறந்த புனித தெரேசா, தியானயோகி மற்றும் கார்மேல் சபையைச் சீர்திருத்தியவர். இயேசுவின் தெரேசா எனவும் அழைக்கப்படும் இப்புனிதரை 1970ம் ஆண்டில் திருஅவையின் மறைவல்லுனராக அறிவித்தார் முத்திப்பேறு பெற்ற திருத்தந்தை 6ம் பவுல். மிகவும் புகழ்பெற்ற The Interior Castle என்ற ஆன்மீக நூல் உட்பட பல கிறிஸ்தவ ஆன்மீக மற்றும் தியானயோக நூல்களை எழுதியுள்ளார் புனித அவிலா தெரேசா.

## புனித குழந்தை தெரேசாவின் பெற்றோரும் புனிதர்கள் – திருத்தந்தை

Lisieux நகர், குழந்தை இயேசுவின் புனித தெரேசா அவர்களின் பெற்றோர், லூயிஸ் மார்ட்டின், மரியா மார்ட்டின் இருவரையும் புனிதர்களென உயர்த்தும் அறிக்கையை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்டுள்ளார்.

புனித படிநிலைகள் பேராயத்தின் தலைவர் கர்தினால் ஆஞ்செலொ அமாத்தோ அவர்களை, திருப்பீடத்தில் சந்தித்தத் திருத்தந்தை, தம்பதியரான லூயிஸ் மார்ட்டின், மரியா மார்ட்டின் ஆகியோரின் பரிந்துரையால் நிகழ்ந்த ஒரு புதுமையை அங்கீகரித்து, இவ்விருவரையும் புனிதர்களாக உயர்த்தும் அறிக்கையை வெளியிட்டார்.

மேலும், இப்பேராயம் பரிந்துரைத்த இறையடியார்கள் ஐந்து பெண்கள் மற்றும் இரு ஆண்கள் ஆகியோரின் வீரத்துவமான புண்ணிய வாழ்வை அங்கீகரித்து, அவர்கள், புனிதர்படி நிலைகளுக்கு உரியவர்கள் என்று திருத்தந்தை ஏற்றுக்கொண்டார்.

இந்த எழுவரில் ஐவர் பெண்கள், மற்றும் இருவர் ஆண்கள். மற்றும், இவர்களில் Pietro Barbarić என்பவர், 23 வயது நிறைந்த இயேசு சபை நவதுறவி என்பதும், Maria Orsola Bussone என்பவர், 16 வயது நிறைந்த இளம்பெண் என்பதும் குறிப்பிடத்தக்கவை. இந்த எழுவரின் விவரங்கள் பின்வருமாறு:

தொடர்ச்சி 15ம் பக்கம்

## திருத்தந்தைக்கு வெள்ளை மாளிகையில் புரட்டாதி மாதம் 23ல் வரவேற்பு

அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசுத்தலைவர் பாரக் ஒபாமா, அமெரிக்க முதல் பெண்மணி மிஷேல் ஒபாமா ஆகிய இருவரும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை வருகிற செப்டம்பர் 23ம் திகதியன்று வெள்ளை மாளிகையில் வரவேற்பார்கள் என்று வெள்ளை மாளிகையின் செய்தி அலுவலகம் இவ்வியாழனன்று அறிவித்தது.

இச்சந்திப்பின்போது, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும், அரசுத்தலைவர் ஒபாமா அவர்களும் தங்களின் பொதுவான அர்ப்பணங்கள் மற்றும் விழுமியங்கள் குறித்து கலந்துரையாடுவார்கள் என்றும் அந்த அலுவலகம் அறிவித்தது.

ஒதுக்கப்பட்டோரையும், ஏழைகளையும் பராமரித்தல், பொருளாதார முன்னேற்ற வாய்ப்புக்களை அனைவருக்கும் வழங்குதல், சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல், உலகில் சமய சுதந்திரத்தை ஊக்குவித்து சிறுபான்மை மதத்தவரைப் பாதுகாத்தல், குடியேற்றதாரரையும், புலம்பெயர்ந்தோரையும் வரவேற்றல் போன்ற விவகாரங்கள் இந்த உரையாடலில் இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2014ம் ஆண்டு மார்ச் மாதத்தில் அரசுத்தலைவர் ஒபாமா அவர்கள் வத்திக்கானில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களைச் சந்தித்தபோது மேற்கொண்ட உரையாடல், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கு மேற்கொள்ளும் முதல் திருத்தூதுப் பயணத்தின்போதும் தொடரவிருப்பதை அரசுத்தலைவர் ஒபாமா அவர்கள் எதிர்பார்த்திருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 15ம் பக்கம்

## 01ம் பக்கம் — மகிழ்ச்சியான...

வறுமையாலும் புறக்கணிப்பாலும் ஏற்பட்டுள்ள பிறநோய்களின் தாக்கத்துக்குள்ளாகி துன்பப்படுபவர்களை பராமரிக்க திடம் தாரும். உலகின் பல பாகங்களில் கடத்தப்பட்ட பெருமளவான மக்கள், குருக்கள், பொதுநிலையினர் போன்று அநீதியான முறையில் தங்கள் சொந்தங்களில் இருந்து பிரிக்கப்பட்டு இம்முறை தங்கள் உயிர்ப்பு விழா கொண்டாட முடியாதுள்ளவர்களை ஆறுதல்படுத்தும், தங்கள் சொந்த நாட்டை விட்டு நல்லதொரு எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள பிற இடங்களில் குடியேறிய மக்களையும் மாண்புடன் வாழக் கூடிய சாத்தியமுள்ள தங்கள் விசுவாசத்தை சுதந்திரமாக அறிக்கை இடக்கூடிய இடங்கள் என்று சொல்லக் கூடிய இடங்களில் குடியேறக்கூடியவர்களை ஆறுதல்படுத்தும். ஆண்டவராகிய இயேசுவே, சிறியதோ, பெரியதோ பழையதோ, புதியதோ எல்லா முரண்பாடுகளையும் யுத்தங்களையும் முடிவு காண உம்மை வேண்டுகின்றோம்.

நாங்கள் குறிப்பாக சிரியாவுக்காக மன்றாடுகின்றோம். முரண்பாடுகளின் தாக்கத்துக்குள்ளாகி துன்பப்படுபவர்கள் தேவையான மனிதாபிமான உதவிகளை பெற்றுக்கொள்ளக் கூடியதாகவும், இருசாராரும் அழிவுக்குரிய படைக்கருவிகளை விசேடமாக பாதுகாப்பற்ற பொது மக்களுக்கெதிராக மிகவும் பாவிக்காதிருக்கவும், மாறாக நீண்ட காலம் கடந்த நீண்ட காலம் காத்திருந்த சமாதானத்தை துணிவுடன் பேசித்தீர்க்க மன்றாடுகின்றோம். மகிமையின் ஆண்டவராகிய இயேசுவே ஈராக்கில் சகோதரப்படுகொலைக்கு உள்ளாகியுள்ளவர்களை திடப்படுத்தும் பாலஸ்தினத்துக்கும் இஸ்ராயேலுக்கும் இடையில் மீளவும் உதயமாகும் பேச்சுவார்த்தை மட்டில் உள்ள நம்பிக்கையை திடப்படுத்தும்.

மத்திய ஆபிரிக்கா குடியரசில் நிழவும் முரண்பாட்டுக்கு முற்றுப் புள்ளி வைக்க உம்மை இரந்து கேட்கின்றோம். நைஜிரியாவில் நடைபெறும் கொடுமையான பயங்கரவாத தாக்குதலையும் தென் சூடானில் நடைபெறும் வன்முறை செயற்பாடுகளையும் தடுத்து நிறுத்தும்.

வெனிசுலாவில் மனங்கள் ஒன்றிணையவும் சகோதர உடன்பாடு ஏற்படவும் வேண்டுகின்றோம். எல்லாத்திருச்சபைகளும் இணைந்து இம்முறை நாம் கொண்டாடும் உம் உயிர்ப்பு விழா வழியாக உக்ரெய்னில் சமாதானத்தை மேம்படுத்த எடுக்கப்படும் முன்னெடுப்புக்களை தெளிவுபடுத்தி ஊக்கப்படுத்த உம்மை வேண்டுகின்றோம். அதனால் இதில் ஈடுபட்டுள்ள சகலரும் சர்வதேச குழுமத்தின் ஒத்துழைப்புடன் வன்முறையை நிறுத்த சகல முயற்சிகள் எடுக்கவும் கலந்துரையாடல் ஒன்றிப்பு மூலம் நாட்டின் எதிர்காலத்திற்கு நற்பாதை அமைக்கவும் வேண்டுகின்றோம். இந்நாளில் சகோதர சகோதரிகளாக கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் அல்லேலூயா என அவர்கள் முழக்கமிடுவார்களாக

உலக மக்கள் எல்லோருக்காகவும் ஆண்டவரே உம்மை வேண்டுகின்றோம். சாவை வெற்றிக் கொண்டு நீர் உம்முடைய வாழ்வையும் அமைதியையும் தந்தருளும்.

## 01ம் பக்கம் — திருப்பாலத்துவ....

### பாடல்களை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி:

அருட்பணி. ரெஜினோல்ட் சபரமாது
தேசிய இயக்குனர்,
பாப்பிரை மறைபரப்புச் சபைகள்
இல 19, பல்கம் இடம்,
கொழும்பு - 8

Rev. Fr. Reginald Saparamadu
National Director,
Pontifical Mission Societies,
No 19 Balcombe Place,
Colombo – 8

## 01ம் பக்கம் — அதி சிரேஷ்ட...

அகில உலகின் அதி சிரேஷ்ட தலைவராக இந்திய மைசூரியல் நிகழ்ந்த மகாநாட்டில் தெரிவு செய்யப்பட்டார்.

அருட்சகோதரர் ஜயராஜ் அருளானந்தம் இலங்கை மாகாண தலைவர், அருட்சகோதரர் ஜெ. செல்வநாயம் உபதலைவர், அருட்சகோதரர் ஜோசப் கிறிஸ்டி மற்றும் அருட்சகோதரர் செபஸ்தியன் ஜோர்ஸ் இலங்கை சார்பாக பிரதிதிகளாக சமூகளிமளித்தனர்.

தகவல்
அருட்சகோதரர் தோமஸ் ஜோசப் ஜஸ்டஸ்
புனித அசிசியார் மறைபரப்பு சபை

## 01ம் பக்கம் — புதிய தலைவர்...

அருட்தந்தையின் பணி சிறக்க எங்களது மன்றாட்டுக்களையும் வேண்டி நிற்பதோடு எமது நல்லாசிகளையும் கூறி நிற்கின்றோம்.

தகவல் : அருட்பணி. S. யூட் பெகின் கொடுதோர் (CMF)
புனித கிளாரட் குருமடம்

## 01ம் பக்கம் — திருத்தந்தையின்...

ஆனால் ஒரு திருத்தந்தையின் விஜயத்தின்போது இவ் அற்புதம் நிகழ்ந்தது இதுவே முதல் தடவையாகும். பீடத்தில் வைக்கப்பட்டிருந்த புனிதருடைய உறைந்த இரத்தம் அடங்கிய திருப்பண்டத்தை திருத்ந்தை பிரான்சிஸ் எடுத்து முத்தமிட்டபோது அது திரவமாக மாறிய அற்புதத்தை அவதானித்த கருதினால் செப்பே "புனித ஜனுவாரிஸ் திருத்தந்தையை அன்பு செய்கிறார் என்பதற்கான அடையாளம் தோன்றியுள்ளது. ஏனென்றால் அவருடைய இரத்தத்தில் பாதி இப்போது திரவமாக மாறிவிட்டது" என்று ஒலிபெருக்கியில் அறிவித்தபோது கூடியிருந்த பெருந்திரளான மக்கள் கூக்குரல் எழுப்பி ஆரவாரம் செய்தார்கள். பலர் கண்ணீர் சிந்தினார்கள். இதனைக் கேட்ட திருத்தந்தை "இரத்தத்தில் பாதி மட்டுமே திரவமாக மாறியிருப்பதால் நாம் இன்னும் நிறைய செய்ய வேண்டியிருக்கிறது. புனிதர் எம்மை அரைவாசிதான் அன்பு செய்கிறார்" என் நகைச்சுவையாக கூறினார். ஆனால் பின்னர் படிப்படியாக முழு இரத்தமுமே திரவமாக மாறிவிட்டது.

புனித ஜனுவாரிஸ் மூன்றாம் நூற்றாண்டில் ஆயராகப் பணிபுரிந்து வேதசாட்சியாக மரித்தவர் என்பதும், இவருடைய இரத்தம் யூசேபியுஸ் என்ற பெண்மணியால் பாதுகாக்கப்பட்டுத் திருப்பண்டமாகப் பேணப்பட்டு வருகிறது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## 08ம் பக்கம் — எங்களோடு தங்கும்...

பார்த்து படித்துக் கொள்ளும் வரை ஒரு கிறிஸ்தவன் தன் வாழ்விற்கான உந்துதலையும், அர்த்தத்தையும் இயேசுவின் கண்களிலிருந்தே பெற்றுக் கொள்கிறான்.

3. இயேசுவை உன் வீட்டுக்கு அழை

கடவுள் மனிதனுக்கு அளித்த கொடைகளிலேயே சிறந்தது அவனது சுதந்திரம்தான். நாம் கடவுளை ஏற்றுக்கொள்ளலாம். இல்லை மறுக்கலாம். அவரை வீட்டிற்கு உள்ளே கூப்பிட்டு அமரச் செய்யலாம். அல்லது வெளியே துரத்தி கதவைச் சாத்தலாம். நமக்குப் பூரண சுதந்திரம் உண்டு. அதில் என்றைக்கும் கடவுள் தலையிடமாட்டார். அது அவர் இயல்பு கிடையாது. தம்மை மற்றவர்கள் மீது வம்பிடியாகத் திணிக்கும் செயலை அவர் என்றைக்கும் செய்ய மாட்டார். எம்மாவு சீடர்கள் நிகழ்ச்சியிலும் நாம் அதைத்தான் பார்க்கின்றோம். "இத்தனை தூரம் உங்களோடு நடந்து வந்திருக்கின்றேன். மறைநூல் குறித்து பாடம் எடுத்திருக்கின்றேன். அதனால் மரியாதையாக இன்றைக்கு இரவு என்னை உங்களோடு தங்க வைத்து சாப்பாடு போடுங்கள்" போன்ற அராஜகக் கோரிக்கைகள் எதையும் இயேசு முன்வைக்கவில்லை. மாறாக, தாம் இன்னும் தூரம் போக வேண்டிய நபர்போல "பாவ்லா" காட்டுகிறார். "எங்களோடு தங்கும்" என்று அவர்கள் வற்புறுத்திய பின்னரே அவர்களோடு தங்கச் செல்கிறார்.

இதுதான் கடவுள்! நீங்கள் கூப்பிட்டால் உள்ளே வருவார். இல்லையென்றால் உங்கள் வாசற்படியிலேயே வாழ்நாள் முழுவதும் காத்திருப்பாரே தவிர, கதவை உடைத்துக்கொண்டு உள்ளே நுழையும் அத்துமீறல்களைச் செய்யமாட்டார். எனவேதான் புனித அகுஸ்தீனார் இப்படிச் சொன்னார்... "The God who created you without you cannot save you without you" "உங்கள் அனுமதி இல்லாமல் உங்களைப் படைக்க முடிந்த கடவுளால் உங்கள் அனுமதியில்லாமல் உங்களை மீட்கமுடியாது".

எம்மாவு சீடர்கள் நிகழ்ச்சி நமக்குச் சொல்லும் செய்தி இதுவே. பாவம் எவ்வளவு நேரம்தான் இயேசு வெளியிலேயே நின்று கொண்டிருப்பார்? கதவைத் திறந்து "எங்களோடு தங்கும்" எனச் சொல்லுங்கள். எங்களோடு தங்கும் இயேசுவே!

## சிந்தனைத் துளிகள்

"துறவு நாம் அணியும் துணிகளில் அல்ல, துணிவு மிக்க பணிகளில் துளிர்க்கின்றது"

"உலகம் வாழ உயிரைத் தருகிறவர்களால் தான் இன்னும் இந்த உலகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது"

"கடவுள் நமக்குத் தந்துள்ள ஆற்றல்கள், செயல்கள், வாழ்வு இவை எல்லாம் இவ்வுலக வாழ்வில் நாம் எல்லோரும் நல்வாழ்வு வாழ்வதற்காகவே"



கத்தோலிக்க திருமண
முன்மொழிதல் சேவை


எமது நிறுவனம் கத்தோலிக்கர்களான உங்களுக்கு கொழும்பு உயர் மறைமாவட்டத்திற்குள் உங்கள் வாழ்க்கை துணையை கண்டுகொள்ள ஒரு அரிய சந்தர்ப்பத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

உயர் மறைமாவட்ட குடும்ப நலப் பணிமனை
ராஜபக்ஷ வளவுவ துடள்ள ஜா எல
+94 (0) 11 223 6457
[தயவு செய்து அலுவலக நேரத்தில் மட்டும் தொடர்பு கொள்ளவும்]
அலுவலக நேரம் : காலை 9.00 தொடக்கம், 3.00 மணி வரை (புதன்கிழமைகளில் மட்டும்)
(N 0073)


## 14ம் பக்கம் — திருத்தந்தைக்கு...

வருகிற செப்டம்பரில் பிலடெல்ஃபியாவில் நடைபெறவிருக்கும் உலகக் கத்தோலிக்கக் குடும்பங்கள் மாநாட்டுக்குச் செல்லும் திருத்தந்தை, வெள்ளை மாளிகைக்கும் செல்கிறார். செப்டம்பர் 24ம் தேதி அமெரிக்க காங்கிரஸ் அவையிலும் உரையாற்றுகிறார் திருத்தந்தை. இந்நிகழ்வு, திருத்தந்தையர் வரலாற்றில் முதன்முறையாக இடம்பெறுகிறது.அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசுத்தலைவர் பாரக் ஒபாமா, அமெரிக்க முதல் பெண்மணி மிஷேல் ஒபாமா ஆகிய இருவரும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை வருகிற செப்டம்பர் 23ம் தேதியன்று வெள்ளை மாளிகையில் வரவேற்பார்கள் என்று வெள்ளை மாளிகையின் செய்தி அலுவலகம் இவ்வியாழனன்று அறிவித்தது.

இச்சந்திப்பின்போது, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும், அரசுத்தலைவர் ஒபாமா அவர்களும் தங்களின் பொதுவான அர்ப்பணங்கள் மற்றும் விழுமியங்கள் குறித்து கலந்துரையாடுவார்கள் என்றும் அந்த அலுவலகம் அறிவித்தது.

ஒதுக்கப்பட்டோரையும், ஏழைகளையும் பராமரித்தல், பொருளாதார முன்னேற்ற வாய்ப்புக்களை அனைவருக்கும் வழங்குதல், சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல், உலகில் சமய சுதந்திரத்தை ஊக்குவித்து சிறுபான்மை மதத்தவரைப் பாதுகாத்தல், குடியேற்ற -தாரரையும், புலம்பெயர்ந்தோரையும் வரவேற்றல் போன்ற விவகாரங்கள் இந்த உரையாடலில் இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2014ம் ஆண்டு பங்குனி மாதத்தில் அரசுத்தலைவர் ஒபாமா அவர்கள் வத்திக்கானில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களைச் சந்தித்தபோது மேற்கொண்ட உரையாடல், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கு மேற்கொள்ளும் முதல் திருத்தூதுப் பயணத்தின்போதும் தொடரவிருப்பதை அரசுத்தலைவர் ஒபாமா அவர்கள் எதிர்பார்த்திருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வருகிற புரட்டாதியில் பிலடெல்ஃபியாவில் நடைபெறவிருக்கும் உலகக் கத்தோலிக்கக் குடும்பங்கள் மாநாட்டுக்குச் செல்லும் திருத்தந்தை, வெள்ளை மாளிகைக்கும் செல்கிறார். செப்டம்பர் 24ம் தேதி அமெரிக்க காங்கிரஸ் அவையிலும் உரையாற்றுகிறார் திருத்தந்தை. இந்நிகழ்வு, திருத்தந்தையர் வரலாற்றில் முதன்முறையாக இடம்பெறுகிறது.

## 14ம் பக்கம் — புனித குழந்தை...

இத்தாலியின் நேப்பிள்ஸ் நகரில் பிறந்த, Francesco Gattola அவர்கள், Suore Figlie della Santissima Vergine Immaculata of Lourdes என்ற துறவு சபையை உருவாக்கிய அருள்பணியாளர்.

Bosnia Herzegovinaவில் பிறந்த Pietro Barbarić, இயேசு சபை நவ துறவியாக, தன் 23ம் வயதில் இறையடி சேர்ந்தார்.அயர்லாந்தில் பிறந்த Mary Aikenhead அவர்கள், அயர்லாந்தில், பிறரன்பு அருள் சகோதரிகள் சபையை உருவாக்கியவர் இத்தாலியில் பிறந்த Elisabetta Baldo அவர்கள், ஒரு கைம்பெண். இவர், Umili Serve del Signore என்ற துறவு சபையை உருவாக்கியவர்களில் ஒருவர்.

Benedictine Samaritan Sisters of the Cross of Christ என்ற துறவு சபையை உருவாக்கிய Edvige Jaroszewska அவர்கள், Vincenza of the Passion of the Lord என்ற பெயரை தன் துறவு வாழ்வில் ஏற்று, போலந்து நாட்டில் தன் 37வது வயதில் இறையடி சேர்ந்தார். ஸ்பெயின் நாட்டில் பிறந்த Giovanna Vázquez Gutiérrez என்பவர், புனித பிரான்சிஸ் மூன்றாம் சபையில் இணைந்து, சபையின் துறவு மடத் தலைவியாக பணியாற்றியவர்.இத்தாலியில் பிறந்து, Focolare இயக்கத்தில் இணைந்த Maria Orsola Bussone என்ற இளம்பெண், தன் 16வது வயதில் இறையடி சேர்ந்தார். இந்த ஏழு இறையடியார்களும் திருத்தந்தையின் அங்கீகாரத்திற்குப் பின், வணக்கத்திற்குரியவர்கள் என்று இனி வழங்கப்படுவர்.

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் (ஓப்செட் முறையில்)
- நவீன பிரதியாக்கம் (டுப்ளோ)
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தலும், ஸ்கேன் எடுத்தலும்,
- பலவர்ணங்களின் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்
- அடையாள அட்டைகள் தொடக்கம் A-3 அளவிலான லெமினேட்டிங் சேவைகள்




## உங்களுக்கான பல விசேட சேவைகள்!

### கொழும்பு கத்தோலிக்க அச்சகம்

| | 1½" x 1" single | 3" x 1"Double | 5" x 1"Trible |
|---|---|---|---|
| 1" | 350/= | 700/= | 1050/= |
| 1½" | 525/= | 1050/= | 1575/= |
| 2" | 700/= | 1400/= | 2100/= |
| 2½" | 875/= | 1750/= | 2625/= |
| 3" | 1050/= | 2100/= | 3150/= |
| 3½" | 1225/= | 2450/= | 3675/= |
| 4" | 1400/= | 2800/= | 4200/= |
| 4½" | 1575/= | 3150/= | 4725/= |
| 5" | 1750/= | 3500/= | 5250/= |
| 5½" | 1925/= | 3850/= | 5775/= |
| 6" | 2100/= | 4200/= | 6300/= |

ஞான ஒளி பத்திரிகையின்
விளம்பரங்களுக்கான விலைப்பட்டியல்

| | பின் பக்கம் | உற்பக்கம் |
|---|---|---|
| ஆலயத் திருவிழா (திருத்தப்பட்டுள்ளது) | | |
| ¼ பக்கம் | 7750/= | 7000/= |
| ½ பக்கம் | 15500/= | 14000/= |
| முழுப்பக்கம் | 31000/= | 28000/= |
| வர்த்தக விளம்பரம் (திருத்தப்பட்டுள்ளது) | | |
| ¼ பக்கம் | 11500/= | 10000/= |
| ½ பக்கம் | 23000/= | 20000= |
| முழுப்பக்கம் | 46000/= | 40000/= |

வர்ணம் + 25 %

திருமண சேவைகளுக்கு
1 தொடக்கம் 15 சொற்கள் வரை
ரூபா 500.00உம் தொடர்ந்து வரும் ஒவ்வொரு
சொற்களுக்கும் ரூபா 8.00 வீதமும் அறவிடப்படும்.

### கொழும்பு கத்தோலிக்க புத்தக சாலையில்...

செபப் புத்தகங்கள், திருச்சுருபங்கள், புனிதர்களின் படங்கள், இறுவெட்டுக்கள், [ஒலி, ஒளி இறுவெட்டுக்கள்] இறந்தோர் நினைவு கல், புதை குழி கட்டுமானப் பொருட்கள், மாணவர்களின் பாடசாலை உபகரணங்கள் உட்பட பல்வேறு விதமான பரிசுப் பொருட்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியவற்றையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.







### தொடர்புகொள்ளுங்கள்

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய
மாவத்தை கொழும்பு - 08.
தொ.பே இல. 0112695984, 0112678106,
0114614927 பெக்ஸ் - 0112692586
E-mail : colombocp@sltnet.lk
www.colombocatholicpress.com



அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட் தந்தை M.E. மகேந்திர D. குணதிலக்க., இயக்குனர், கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்